# அர்ச்சுனா

கல்வி — முயற்சி — பெருவாழ்வு



விலை ரூபா 3/-

இளவல்கள் அறிவமுதத் திங்கள் இதழ்

SITHY VINAYAGAR LIBRARY
KARALAI WEST

*With the Best Compliments*

*From* **GLOBE INDUSTRIES**

173, 4TH CROSS STREET
JAFFNA

Telephone: 23187

**எம்மிடம் அச்சகத்திற்குத் தேவையான எல்லாவிதமான காகிதாதிகளும் "GLOBE", "GRAFO" ஆகிய மை வகைகளும் விசேட கழிவுடன் பெற்றுக்கொள்ளலாம்.**

*APPROVED DEALERS FOR:*

- National Paper Corporation
- Manufacturers of Exercise Books

SITHY VINAYAGAR LIBRARY
SANLALAI WEST
CHUNNAKAM

# வெளியீட்டாளர் அறிமுகம்

**அன்பார்ந்த மாணவ மணிகளே!**

உங்கள் மனம் நிறைந்த நண்பன் ''அர்ச்சுனாவை'' அறிமுகம் செய்வதில் மகிழ்ச்சி அடைகிறோம்.

உதயன் குடும்பத்தின் மூன்றாவது வெளியீடு அர்ச்சுனா. அவன் உங்கள் கல்வி விருத்திக்கு அறிவு வளர்ச்சிக்கு உதவுவதற்கென்றே உருவெடுத்து உள்ளவன்.

அர்ச்சுனா —

காலத்திற்கு ஏற்ற வகையில், உங்கள் தேவை அறிந்து பள்ளிப் பாடங்கள் சம்பந்தப்பட்ட அம்சங்களைத் தருவான். மேலதிக பின்னணி அறிவுப் பெருக்கத்திற்கு வேண்டிய அம்சங்களையும் தந்திடுவான்.

அறிவு என்பது பேராழி. அதில் இருந்து உங்களுக்குத் தரக்கூடிய - நீங்கள் விரும்பும், எதிர்பார்க்கும் அத்தனை முத்துக்களையும் ''அர்ச்சுனா'' தேடித் தருவான்.

உங்கள் நலன் நாடி —

மாணவர் - இளைஞர் சஞ்சிகை ஒன்று தமிழில் இல்லாத குறை போக்கு முகமாகவே ''அர்ச்சுனாவை'' வெளியிட முன்வந்தோம்.

மகாபாரதத்தில் வரும் அர்ச்சுனனை அறிந்திருக்கிறீர்கள் அல்லவா? வீரம், கல்வி, ஞானம் ஆகியவற்றில் அவன் வித்தகன். துடிப்பு மிக்கவன். அவனைப் போல நீங்கள் வளர வேண்டும் என்பதற்காகவே அவனை உங்களுக்குத் தோழன் ஆக்குகிறோம்.

உங்களுக்குப் பல்வேறு துறைகளிலும் உள்ள ஆர்வத்தையும், திறமையையும் வளர்க்கவும் ''அர்ச்சுனா'' உங்களுக்கு உதவுவான்.

இந்த மாதம் சர்வதேச சிறுவர் மாதம். அது மட்டுமா?

வித்தியாரம்பம் செய்யும் விஜயதசமி இன்று. சிறுவர்களுக்கு ஏடு தொடங்கும் மங்களகரமான நன்னாள்.

இரண்டையும் ஒட்டி ''அர்ச்சுனா''வை உங்களுடன் சேர்ந்து பழகவிடுகிறோம்.

உங்கள் கல்வி, பொதுஅறிவு சம்பந்தமான குறை நிறைகளை அவனோடு பகிர்ந்து கொள்ளலாம்.

உங்கள் அன்பும் ஆதரவும்தான் அர்ச்சுனாவின் வளர்ச்சி. அவனது வளர்ச்சி உங்கள் அறிவின் உயர்ச்சி.

வணக்கம்.
நிர்வாகிகள்,
உதயன் பிரசுராலயத்தினர்,
யாழ்ப்பாணம்.

## உள்ளே...........


- ஆசியுரைகள்
- நீதியின் வெற்றி
- துணுக்குக் குவியல்
- வளருகின்றபயிர்கள்
- விடுதலைத் திருநாள்
- கணனி நிகழ்ச்சி
- சமய வாழ்வு
- கோயில் திருவிழா
- அப்பா அம்மா சொன்னபடி
- அறிவுலக அறிமுகம்
- பாம்பு துரத்திய கதை
- குட்டி மாமா
- கணிதப் புதிர்
- லண்டன் வாழ்வு
- பாப்பா பார்க்கும் அப்பா
- எண் சிலம்பம்
- சீனத்துச் சிறுவர் கதை
- உலக அரங்கில்
- விளையாட்டுத்துறை


அர்ச்சுனாவில் வெளிவரும் கதை, கவிதை, கட்டுரைகளின் கருத்துக்கள் யாவும் அவற்றைப் படைத்த படைப்பாளிகளையே சார்ந்து நிற்கும்.

ஆ—ர்

# ஆசியுரைகள்

**மெய்யன்பர்களே !**

''உதயன்'' பத்திரிகை நிறுவனத்தார் உதயன், சஞ்சீவி என்ற புதினப் பத்திரிகைகளை வெளியிட்டு, அவைகள் மக்களிடையே பெரு மதிப்பைப் பெற்றுள்ளமையை யாவருமறிவர்.

நடுநிலைமை, அஞ்சாமை, உண்மை உரைத்தல், என்பவை இப்பத்திரிகைகளின் வெற்றிக்குக் காரணமாகும்.

இப்பொழுது, காலகட்டத்தின் தேவைக்கேற்ப ''அர்ச்சுனா'' என்றசஞ்சிகை ஒன்றினை வெளியிட முன்வந்துள்ளனர்.

இணை ஈடற்ற வில் வீரனின் நாமத்தைத் தாங்கி வரும் இச்சஞ்சிகையில் சுவாமி விவேகானந்தரின் போதனைகளான அஞ்சாமை, பசிப்பிணி அகற்றல், உண்மை பேசுதல், நலிவுற்றோருக்கு இரங்கி இயன்ற உதவிகளைச் செய்தல், ஆகிய தொண்டுகளைப் பின்பற்றி கட்டுரைகள், கதைகள், கவிதைகள் வெளிவரின் "எல்லோர்க்கும் பயனுடையதாக இருக்கும்.

நிச்சயம், வாசகர்களை வாழ்க்கையின் வெற்றிப் பாதையில் முன்னேற்ற வழி வகுக்கும்.

தெய்வ உணர்வை வளர்க்கும் நோக்குடனும் இச் சஞ்சிகை இயங்க வேண்டுவதும் முக்கியம்.

எல்லாம் செவ்வனே நிறைவுற இறையருளைச் சிந்தித்து எமது உளமார்ந்த நல்லாசிகளை வழங்குகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய ஸ்வாமிகள்.**

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்,
நல்லூர், யாழ்ப்பாணம்.

அன்பான வாசகர்களே!

உதயன் - சஞ்சீவி நிறுவனத்தினர் அறிவு, ஆக்கம் அபிவிருத்தியைக் கருத்திற் கொண்டுஇலங்கை வாழ் தமிழ் மக்களுக்கு செய்துவரும் அரும்பணியை நாம் நன்றாக அறிவோம்.

நாளாந்த வெளியீடு, வார வெளியீடுகளுக்கு ஊடாகத் தமிழ் கலாச்சாரத்திற்கும், தமிழ் சமுதாயத்திற்கும் கடந்த சில காலங்களாக உயர்ந்த கலைக்குரிய பணியை செய்துவருவதை அறிஞர் யாவரும் மெச்சி வருகிறார்கள். தொடர்ந்து '' அர்ச்சுனா'' என்ற மாதாந்த வெளியீட்டைப் பிரசுரிக்க முன்வருவதை மகிழ்ச்சியுடன் வரவேற்கின்றோம்.

கல்வி, முயற்சி, பெருவாழ்வு என்னும் குறிக்கோள்களை முன்வைத்து பிரசுரிக்கப்படும் இவ் வெளியீடு நம் அறிவையும் இலக்கிய ஆற்றலையும் வளர்க்கும் என்பதற்குச் சந்தேகம் இல்லை.

பலரும் படித்து மகிழவும், சிந்தித்துப் பணிகளிலிறங்கவும், உதவுவதாக என நல்லாசிகளை வழங்குகின்றேன்.

டி.ஜே.அம்பலவாணர்
ஆயர் இல்லம்,
வட்டுக்கோட்டை.

யாழ் ஆயர்:
தென்இந்திய திருச்சபை.

# ஆசியுரைகள்

முகிதீன் பள்ளி,
முஸ்லீம் வட்டாரம்,
யாழ்ப்பாணம்.

தமிழ் கூறும் நல்லுலகின் இலக்கியப் பரப்பினிலே தமது பங்களிப்பைச் செய்ய உதயன் நிறுவனத்தினர் ''அர்ச்சுனு'' என்ற மாத சஞ்சிகையை வெளியிடுவதைக்கண்டு பெருமகிழ்வடைகின்றேன்.

சமுதாய மாற்றமும், வரலாற்றுத் திருப்பமும் நிகழ்ந்து கொண்டிருக்கும் காலம் இது. இலக்கிய அம்சங்கள் சமுதாயத்தின் கண்ணுடி என்பதும் நமக்குத் தெரியும். வருங்கால வள நாட்டை வழி நடத்தும் தலைவர்களான மாணவர்கள் மத்தியிலே ''அர்ச்சுனு'' கருத்துச் செறிவுள்ள கதைகள் மூலமும் உயிரோட்டமுள்ள கவிதைகள் வாயிலாகவும், தனது தனித்துவத்தை நிலைநிறுத்தும் என்பது உறுதியாகி விட்டது.

உதயன் நிறுவனத்தினரின் கடந்த கால பத்திரிகை அனுபவமும் சமுதாயப் பற்றும் இத் திங்கள் வெளியீடு அழகும் வளமும் பெற உரமாக அமையுமென்று வாழ்த்துகின்றேன்.

'' அர்ச்சுனு '' செய்யப்போகும் இலக்கியப் பணியை அன்போடு வரவேற்று ஆசி கூறுகின்றேன்.

மௌலவி செ. சதக்கத்துல்லா.
பேஷ் இமாம்.

*Rt. Rev. Dr. B. Deogupillai*
*Bishop of Jaffna*

*Bishop's House*
*P. O Box 2*
*Jaffna*
*Sri Lanka (Ceylon)*
Telephone: (021) - 22161

எதிர்வரும் ஒக்டோபர் மாதம் முதல் ''உதயன்'' செய்தி இதழ் நிறுவனத்தின் வெளியீடாக ''அர்ச்சுனு'' என்னும் மாணவர் திங்கள் இதழ் பிரசுரமாக இருப்பதையறிந்து மகிழ்ச்சியடைகின்ருேம்.

இந்த நன்முயற்சியை வரவேற்பதுடன், மாணவர்கள் இறைபக்தியிலும் ஒழுக்க நெறியிலும், அறிவிலும் விருத்தி பெற இத்திங்களிதழ் வழிகாட்டல் வேண்டுமென்றும் ஆசிக்கின்ருேம்.

வ. தியோகுப்பிள்ளை
யாழ் ஆயர்

ஆயர் இல்லம்
யாழ்ப்பாணம்.

# அர்ச்சுனு

கல்வி — முயற்சி — பெருவாழ்வு


நீதி, உயர்ந்தமதி, கல்வி — அன்பு
நிறைய உடையவர்கள் மேலோர் — பாரதி

## உங்களோடு ஒரு கணம்


தனு: 1

அர்ச்சுனு

ஒக்டோபர்

1986

கணை: 1


அன்பான இளவல்களே!

அர்ச்சுனன் வித்தைகளில் வல்லவன். கல்வியில், வீரத்தில், ஞானத்தில் கைதேர்ந்தவன்.

அவன் பெயரில் உங்கள் கைகளில் தவழும் **'அர்ச்சுனு'** உங்கள் எல்லோரதும் உற்ற நண்பன். உங்கள் ஆசானுகவும் விளங்குவான்.

உங்கள் அறிவு விருத்திக்கு உழைப்பதே அவன் பணி; சேவை எல்லாம். பாப்பா முதல் உயர்பள்ளி மாணவன் வரை எல்லோரதும் கல்வி வளர்ச்சிக்கு உறுதுணையாக விளங்குவது அவனது இலட்சியம்.

பள்ளிப்பாடம் முதற்கொண்டு பக்கத்துணைத் தகவல் இழையோட பொதுஅறிவு, நவீன விஞ்ஞான தொழில்நுட்ப விடயங்கள் மிளிர, விரிந்து பரந்த துறைகள் பொதிந்த அறிவுப் பெட்டகமாக கல்விக் களஞ்சியமாக, அறிவுச் சுரபியாக **'அர்ச்சுனு'** விளங்குவான்.

உங்கள் தேவை அறிந்து, காலம் அறிந்து உங்களோடு ஒட்டி உறவாடுவான்; உதவுவான்.

ஈழத்தில் தமிழில் மாணவர் சஞ்சிகை, இல்லாத குறையை **'அர்ச்சுனு'** போக்குவான். காலத்திற்கு ஏற்ற அம்சங்களை, சிறப்பம்சங்களைத் தந்து ஈழத் தமிழ் மண்ணில் அறிவுச்சுடர் பிரகாசிக்க, கல்விச் செல்வம் கொழிக்க அயராது பாடுபடுவான்.

உங்கள் வளர்ச்சி அவனது வளர்ச்சி, உங்கள் தேவை **'அர்ச்சுனு'** வின் சேவை. அவன் திங்கள் தோறும் தரும் அறிவுத் தீஞ்சுவையை ருசிக்கத் தவருதீர்கள்.

வணக்கம்.

பிரதம ஆசிரியர்.

ஓவியத்துக்கு ஒரு கருத்தோவியம்

# நீதியின் வெற்றி!

— வே. வரதசுந்தரம்

இந்திய ஆன்மீக இலக்கியப் பரப்பிலே கிருஷ்ணர் ஓட்டிய தேருக்குத் தனிச் சிறப்பு உண்டு. இத் தேர் ஒரு தத்துவத்தை வெளிப்படுத்துகிறது.

இத்தேரில் செல்லும் பயணி அர்ச்சுனன். இத்தேரினைச் சாரத்தியஞ் செய்பவர் (தேரோட்டி) கிருஷ்ணர். தேரினை இழுக்கும் குதிரைகள் ஐந்து.

தேர் உடலையும், குதிரைகள் ஐம்புலன்களையும், கடிவாளம் மனத்தையும், அர்ச்சுனன் ஜீவாத்மாவையும் குறிக்கும்.

ஐம்புல நுகர்ச்சியுள்ள மனத்தைப் புத்தியினுல் வழிப்படுத்தி ஆத்மா ஈடேற வேண்டும் என்பது தெளிவு.

பாண்டவர்களுக்கும், கௌரவர்களுக்கும் இடையே நிகழும் சண்டை இத்தேர்க் காட்சியின் பகைப்புலம். நீதிக்கும் அநீதிக்கும் இடையே, மனிதனின் தாழ்ந்த உணர்வுகளுக்கும், உன்னத உணர்வுகளுக்கும் இடையிலான போரை இது சுட்டி நிற்கும்.

சிறுபான்மையினரான பாண்டவர்கள் நெடுங்காலம் பல்வேறுபட்ட துயரங்களை அனுபவித்த பின்னர், இறுதியில் வெற்றி பெறுவதையும், அநீதிகளைச் செய்த பெரும்பான்மையினரான நூற்றொருவர் ஈற்றிலே தோல்வி அடைவதையும் இப்போரிலே காண்கிறோம். நீதியின் பக்கம், கிருஷ்ண பரமாத்மா வடிவில் திருவருள் துணை நிற்கிறது.

**அர்ச்சுனன் சலனம்**

குருஷேத்திரப் போர்க்களத்தில் அர்ச்சுனன் மனச்சலனம் அடைகிறுன். உறுதி குலைந்து வில்லம்புகளை நிலத்தில் வைக்கிறுன். இந்த நிலையிலே போர் அணிகள் இரண்டுக்கும் மத்தியிலே இத்தேரில் இருந்துகொண்டு கிருஷ்ணர் அர்ச்சுனனுக்கு கீதையை உபதேசம் செய்கிருர். இவ்வுபதேசத்தைக் கேட்ட மாத்திரத்தே அர்ச்சுனன் எதற்கும் சளைக்காத மன உறுதி பெறுகிறுன். தனது கடமையைச் செய்து வெற்றி பெறுகிறுன்.

கிருஷ்ணர் இங்கு போதித்த உண்மைகளை இதுவரை எந்த அவதாரமும் போதிக்கவில்லை. அவரது செய்தியிலும் பார்க்கச் சீரிய செய்தியை வேறுயாரும், எந்த நூற்றுண்டிலும் மனித சமுதாயத்துக்குத் தந்தருளவில்லை என்று துணிந்து கூறலாம்.

கால, தேச, இன, மத, மொழி வேறுபாடுகளையும் எல்லைகளையும் கடந்தது கீதை உபதேசம்.

சிந்தையள்ளும் அச்செய்தியின் சாரம் இதோ;

✶ நாம் நமது கடமைகளை விருப்பு வெறுப்பின்றிச் செய்தல் வேண்டும்.

✶ சேவை செய்யும்போது பலனைக் கருதாமல் இயங்குதல் வேண்டும்.

✶ யான், எனது என்னும் அகந்தையை விடுத்து இறைவனின் கருவி என்ற பணிவுணர்வுடன் செயலாற்ற வேண்டும்.

✶ வாழ்க்கையில் உயர்மட்டம், கீழ்மட்டம் ஆகிய இரு நிலைகளில் உள்ள மக்களையும் சமமாக நேசிக்கும் நல்லுணர்வு வேண்டும்.

✶ நண்பன், எதிரி என்று வேறுபாடின்றிச் செயலாற்றும் மனப்பக்குவம் வேண்டும்.

✶ வெற்றி தோல்வி இரண்டினையும் சமமாக நோக்கும் மனத்திராணி வேண்டும்.

பார்த்தீர்களா! இப்போதுஎன்கடன் பணிசெய்து கிடப்பதே என்று தெளிவு பெறுகிறோம் அல்லவா? ✶

நசை களற்ருன்,
நானென்பதற்ருன்
உறுதியுங் களிதரும்
ஊக்க முடையான்
வெற்றி தோல்வியில்
வேறுபாடற்ருன்
இங்ஙனமாகித் தொழில்க
ளியற்றுவோன்
ஒளியியல் புடையான்
என்ப!

— பாரதியார்

✶ எவ்வெப்பொழுது தர்மத்திற்கு இடையூறு நேரிடுகின்றதோ, அதர்மம் அபிவிருத்தியடைகின்றதோ, அவ்வப்பொழுது நான் அவதரிப்பேன்'

— ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா

# துணுக்குக் குவியல் ★ துணுக்குக்

உலகில் எந்த ஒரு நாட்டிலும் இல்லாத பழக்கம் ஜப்பானில் உண்டு. அங்கு குழந்தைகளுக்கு இரண்டு கைகளாலும் எழுதப் பழக்கிவிடுகின்றார்கள்.

★ ★ ★

சீனாவின் பெருஞ்சுவர் என்று கேள்விப்பட்டிருக்கின்றோம். அதன் மொத்த நீளம் எவ்வளவு தெரியுமா? 2500 மைல்கள். இதன் வயது 1700 வருடங்கள்.

பூமியைச் செயற்கைக் கிரகம் மூலம் மிகவும் உயரத்தில் சுற்று பவர்களுக்கு கண்ணில் படுவது இந்த மதில் ஒன்றுதானாம்!

★ ★ ★

மிகவும் இனிப்பான செய்தி!

சீனியிலும் பார்க்க இனிப் பான பொருள் ஒன்று உலகில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கலிபோர்னியா பல்கலைக் கழ கத்தில் பணியாற்றும் விஞ்ஞானி கள் இந்த இனிப்பான பொரு ளைக் கண்டுபிடித்துள்ளனர்.

மேற்கு ஆபிரிக்காவில் கடேம் (Katemf) என்ற செடிகளில் இருந்து 'ரூமடின்' (Toumatin) என்ற இரசாயனப் பொருள் ஒன்றை இந்த விஞ்ஞானிகள் கண்டுபிடித்தனர்.

சீனியிலும் பார்க்க பத்து லட் சம் மடங்கு அதிகமாக இனிப்பு ரூமடின்' பொருளில் உள்ளது கண்டுபிடிக்கப்பட்டது.

ஒரு தொன் தண்ணீரை இனிப் பாக்க 1 கிராம் ரூமடினைக் கலந்துவிட்டால் போதும், அவ் வளவு தண்ணீரும் இனிக்கும்.

★ ★ ★

சிலி நாட்டைச் சேர்ந்த லியோண்டினா அவ்வினா என்பவர் "சம்பியன் மதர்" எனப் பெயரெடுத்துள்ளார். தாயாவதில் இவர் பெரும் சாதனை புரிந்துள்ளார். சமீபத்தில் தனது 51 வது குழந்தையைப் பெற்றெடுத்த இவர் பத்து முறை இரட்டைக் குழந்தைகளையும் ஏழு முறை மும்மூன்று குழந்தைகளையும் பெற்றுள்ளார். நம்புவது கஷ்டம்தான், ஆனால் உண்மை

★ ★ ★

இமயமலையில் யாரும் சும்மா ஏறிவிட முடியாது. மலைச் சிகரங்களின் உயரத்திற்குத் தக்கவாறு அவற்றில் ஏறுவதற்குக் கட்டணம் செலுத்த வேண்டும். எவரெஸ்ட் சிகரத்தில் ஏறுவதற்குக் கட்டணம் எவ்வளவு தெரியுமா?

ரூபா 50 ஆயிரம்!

★ ★ ★

குழந்தைகளுக்கும் பெற்றோர்களுக்கும் இடையே பரஸ்பர புரிந்துணர்வை வளர்க்க, டெலிவிஷன்களை வீடுகளில் சில தினங்கள் பூட்டி வைக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுவிக்கப்பட்டுள்ளது

இந்த வேண்டுகோளை டோக்கியோ இளைஞர் பிரச்சனைக்கான கவுன்சில், டோக்கியோ கவர்னருக்கு விடுத்தது.

டெலிவிஷன்களைப் பூட்டி வைப்பதன் மூலம் வீடுகளில் பெற்றோர்கள் குழந்தைகள் இடையே புரிந்துணர்வு வளர வாய்ப்பளிக்கப்படமுடியும் என்று இந்த அமைப்பு காரணம் காட்டியுள்ளது.

★ ★ ★

கிளைகளே இல்லாத அப்பிள் மரம் ஒன்று பிரிட்டனில் உள்ள கென்ற் விவசாயப் பண்ணையில் பரீட்சார்த்தமாக வளர்க்கப் பட்டு வருகின்றது.

பிரதான மரத்திலேயே அப் பிள் காய்க்கிறதாம்.

கனடாவில் பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணத்தில் உள்ள மரம் ஒன்றுடன் ஒட்டு வைத்ததனால்தான் இப்புதிய ரக அப்பிள் மரம் உண்டானது.

இந்தக் கிளைகள் இல்லாத மரத்தில் இருந்து அப்பிள் பழங் களைப் பறிக்க விசேட இயந்திரம் ஒன்றைத் தயார் செய்ய வேண் டும்.

★ ★ ★

மனித உடம்பில் நோவு கூடுவதும் குறைவதும் நேர அட்ட வணைப்படிதானாம்.

ஆஸ்திரிய வைத்திய நிபுணர் கள் இதனைக் கண்டுபிடித்துள்ள னர்.

காலை 11 மணிக்கும் 12 மணிக் கும் இடையில் உடம்பில் ஊசி ஏற்றும்போது நோவு அதிகமாக இருக்கும். ஏனைய நேரங்களில் குறைவாகவே இருக்குமாம்.

உடலின் உள்ளுறுப்புக்களில் மாலை 6 மணியளவில் நோவு அதிகமாக இருக்குமாம்.

★ ★ ★

அண்டவெளியில் புதிய கிரகம் ஒன்றை கொப்பன்ஹேகன் பல்

# குவியல் ★ துணுக்குக் குவியல்

கலைக் கழக வானசாஸ்திர விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

பூமியில் இருந்து 20 கோடி கிலோமீட்டர் தூரத்திலுள்ளது இக்கிரகம்.

வானவெளியில் இருக்கும் நட்சத்திரங்கள் பட்டியலில் இல்லாத பொருள் ஒன்றை படம் ஒன்றில் விஞ்ஞானிகள் கண்டனர்.

சுமார் 70,000 படங்களுக்கு மேல் அப்பொருள் படம் பிடிக்கப்பட்டது.

70,000 படங்களையும் நன்றாக ஆராய்ந்த பின்னரே, அப்பொருள் புதிய கிரகம் என்று விஞ்ஞானிகள் உத்தியோக பூர்வமாக அறிவித்தனர்.

★ ★ ★

கடல் அலைமீது மிதந்த வண்ணம் சூரிய ஒளியில் மின்சாரம் உற்பத்தி செய்யும் இயந்திரம் ஒன்று ஜப்பான் நாட்டில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

ஜப்பானில் இயங்கும் முதலாவது மின்நிலையம் இதுவாகும்.

★ ★ ★

நிலத்தின் அடியில் எண்ணை வளம் இருக்கிறதா என்பதை நிலத்தைத் தோண்டித்தான் பார்க்க வேண்டும் என்பதில்லை.

வானத்தில் இருந்தே ஆராய்ந்து கண்டு பிடிக்கலாம்.

இப்படி ரஷ்ய பூகர்ப்பவியலாளர்கள் அறிவித்திருக்கின்றனர்.

ரஷ்யாவில் உள்ள டர்ஜிகிஸ்தான் மாநிலத்தில் இப்படித்தான் எண்ணை வளம் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாம்.

ஆகாயத்தில் இருந்து சம்பந்தப்பட்ட பிரதேசங்கள் முதலில் படம் எடுக்கப்படுகின்றன. அப்படங்களைப் பார்த்து பூமியின் கீழ் உள்ள வளங்கள் கண்டுபிடிக்கப்படுகின்றன.

ஐந்தே ஐந்து நிமிடங்களில் இந்த ஆராய்ச்சி முடிந்துவிடுகிறதாம்.

★ ★ ★

செல்வந்த நாடு என்று வர்ணிக்கப்படும் அமெரிக்காவில் 3 கோடி 31 லட்சம் பேர் வறுமைக் கோட்டின் கீழே வாழ்க்கை நடாத்துகின்றனர்.

இது நாட்டின் சனத் தொகையில் 14 சதவீதமாகும்.

சுருங்கக் கூறின் 7 அமெரிக்கர்களுக்கு ஒருவர் ஏழை.

1986 இல் நடத்தப்பட்ட புள்ளி விபரக் கணக்கெடுப்பில் இத்தகவல் வெளியாகியது. அமெரிக்க புள்ளி விபரத் திணைக்களம் இக்கணக்கெடுப்பை நடத்தியது.

★ ★ ★

துளசிச்செடி, புராதன காலத்தில் இருந்து மருந்துக்குப் பயன்படுத்தப்பட்டு வரும் மூலிகையாகும்.

பிரான்ஸ் நாட்டில் புரொவென்ஸ் பகுதியில் இச்செடி பாலகர்களின் 'தாதி'யாக விளங்குகின்றது.

நித்திரையில் இருக்கும் பாலகர்களின் காவலராக துளசிச் செடி வர்ணிக்கப்படுகின்றது.

பாலகர் இருக்கும் அறையினுள் துளசிச் செடியுடன் சாடி ஒன்று இருந்தால் போதும் பாலகன் நிம்மதியாகத் தூங்குவான். நுளம்புகள் மத்தியிலும் நிம்மதியாக நித்திரை கொள்ளமுடியும்.

துளசிச் செடியில் இருந்து வெளிவரும் நறுமணம், நுளம்புக்குப் பிடிக்காது.

இப்படி ரஷ்யாவில் இருந்து பிரசுரமாகும் 'ஏம்என்' சஞ்சிகை தெரிவித்துள்ளது.

★ ★ ★

3 வயதில் ஓர் 'அறிவாளி' சீனுவில் வாழ்கின்றார்.

ஹீநான் என்ற பெயருடைய இந்தப் பாலகன் முதலாவது வயதானபோது உலகப் படத்தில் 37 நாடுகளை அடையாளங் காட்டினான். 50 செய்திப் பத்திரிகைகளைப் படித்துக் காட்டினான்.

இரண்டு வயதானபோது, அவனுக்கு சீனத் தலைவர் மாசேதுங்கின் கவிதைகள் மனப்பாடம். அதுமட்டுமல்ல 10 சிறுகதைகளை அவனால் திருப்பிச் சொல்ல முடிந்தது.

இப்போது மூன்று வயதாகி விட்டது. விளையாட்டை விரும்பாத இச்சிறுவன், தட்டச்சுக் கலையைக் கற்றுக் கொண்டான்.

100 புத்தகங்கள் கொண்ட நூல் நிலையம் ஒன்றை வீட்டில் வைத்துள்ள இந்த 'அறிவாளி'க்கு இப்போது 50 ஆங்கிலச் சொற்கள் தெரியும். சீனப் பத்திரிகை ஒன்றின் அரைவாசியை வாசித்து முடித்து விடுவான்.

60 விதமான வாகனங்களை அவனால் அடையாளங் காட்ட முடியும்.

மூன்று வயதிலே இவ்வளவும் செய்யும் ஹீநான் சீனுவின் சாங்பிங் பகுதியில் வசிக்கின்றான்.

தொகுப்பு : "தீவசி"

# வளர்கின்ற * * * * * * பயிர்கள் எல்லாம்

வளர்கின்ற பயிர்கள் எல்லாம்
வானையே நோக்கிப் போகும்
எழுகின்ற செயல்கள் எல்லாம்
எங்களால் இயல்வ தாகும்.

விழுகின்ற பொருள்கள் எல்லாம்
தரையினை நோக்கி வீழும்
உழுகின்றோர் தொழில்செய் கின்றோர்
உழைப்போரால் உலகம் வாழும்.

பாய்கின்ற தண்ணீ ரெல்லாம்
பள்ளமே நோக்கிப் பாயும்
ஆய்கின்ற அறிஞர் கூறும்
அறத்தினுல் நிலம்முன் னேறும்.

காய்கின்ற வெயிலைச் சுற்றிக்
ககனத்தே சுழலும் பூமி
போய்ஒன்றை முடித்தால் அன்றிப்
புகழ்என்றும் வராது சாமி.

- மஹாகவி

அன்பான மாணவர்களே!

"அர்ச்சுனு" அடுத்த இதழில்

## கணிதக் குறிப்புகளும் பயிற்சிகளும்

சு. கிருஷ்ணகுமார். B.Sc

"அர்ச்சுனு"
அடுத்த இதழ்
ஈழத்துப்
படைப்பாளிகளின்
எண்ணக் கருவூலங்கள்
பலவற்றைத் தாங்கி
புதுப்பொலிவுடன்
வெளிவர இருக்கின்றது.
ஏமாற்றத்தைத் தவிர்த்துக்
கொள்ள உங்கள் பிரதிக்கு
இன்றே பதிவு செய்து
கொள்ளுங்கள்.

### ஜப்பானில்

நிலக்கரிச் சாம்பலைக் கொண்டும் வீதி அமைக்கப்படுகின்றது.

இது இலங்கையில் அல்ல ஜப்பானில்தான் இந்த முறை கடைப்பிடிக்கப்படுகின்றது.

நிலக்கரிச் சாம்பல் 75 சத வீதமும் சிமேந்து 25சத வீதமும் கலக்கப்பட்ட கலவை, தாருக்குப் பதில் பாவிக்கப்படுகின்றது.

தீபாவளி மலரில்.........
ரகுவின் சித்திரக்கதை இடம் பெறும்.

"அர்ச்சுனு"
பிரதிகள் தேவைப்படும் பாடசாலைகள், நூல்நிலையங்கள், சங்கங்கள், மன்றங்கள், தனியார் கல்வி நிலையங்கள் ஆகியன எம்முடன் தொடர்பு கொண்டு ஏற்ற ஒழுங்குகளை முன்கூட்டியே செய்து கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

ஆ—ர்

SITHY VINAYAGAR LIBRARY
SARLALAI WEST
CHUNNAKAM



# விடுதலைத் திருநாள் விஜயதசமி

அன்னையின் வணக்கத்துக்குரிய தினங்களே நவராத்திரி தினங்களாகும். இது புரட்டாதி மாதத்து வளர்பிறையின் முதல் ஒன்பது நாட்களிலும் கொண்டாடப்படுகின்றது. பத்தாம் நாள் விஜயதசமி என்று கொண்டாடப்படும் மகாநோன்பு நாளாகும். இது மானம்பு திரு விழா எனவும் அழைக்கப்படும். வட இந்தியாவில் இவ்விழாவைத் "தசரா" என்பர். தச என்பது பத்து என்று பொருள்படும்.

ஒரு காலத்தில் உலகிலே அதர்மம் ஓங்கித் தர்மம் குன்றத் தலைப்பட்டது. மகிடாசுரன் என்னும் அரக்கன் எருமை வடிவங் கொண்டவன். அஞ்ஞான வடிவமே எருமை. இவ்வடிவங் கொண்ட அசுரன் விரும்பியபோது தேவ, மானுட, மிருக வடிவங்களைப் பெற்று தேவர்களைக் கொடுமைப்படுத்தலானான். அத்துடன் பிரம்மனிடம் கடுந்தவம் புரிந்து மரண பயமில்லா வரமும் பெற்றிருந்தான். அதாவது ஒரு பெண்ணால் அன்றி வேறெவராலும் மரணம் நேரக்கூடாது என்பதாகும். தர்மத்துக்கு நேர் விரோதமாகத் தேவர்களைப் பலாத்காரமாக ஈடுபடுத்தித் துன்புறுத்தலானான். துன்பம் பொறுக்க முடியாத தேவர்கள் மும்மூர்த்திகளிடம் முறையிட்டனர்.

இது மகாசக்தியின் செயல்களில் ஒன்றெனஅறிந்த மூர்த்திகளும் அந்த பராசக்தியை தியானிக்க வேண்டும் அவள் ஒருத்தியே அவர்களை அழிக்க வல்லவள் என்று கூறினர். அவ்வண்ணமே சக்திகளெல்லாம் ஒன்று சேர்ந்த அன்னை பராசக்தி தோன்றினள். அம்மா வந்துவிட்டாள்; மகிடன் மடிந்தான்; எனத் தேவர்கள் ஆனந்தமடைந்தனர். பரமேஸ்வரன் சூலாயுதத்தையும், நாராயணன் ஒரு சக்கரத்தையும், இமவான் சிங்கவாகனத்தையும் அம்பாளுக்குக் காணிக்கையாக்கிக் கொடுத்தார்கள். அன்னை பராசக்தி தன்னை துர்க்கை, லக்சுமி சரஸ்வதி என மூன்று வடிவங்களாக்கிக் கொண்டு மூன்று மூன்று நாட்களாக ஒன்பது நாட்கள் கடும் சமர் புரிந்து அரக்கர்களை எல்லாம் அழித்து ஒழித்தாள். தேவர்கள் துயர் எல்லாம் தொலைந்தன. அந்த ஒன்பது நாட்களுமே நவராத்திரி நாட்களாகும்.

அடுத்த நாளாகிய பத்தாவது நாள் தேவர்கள் யாவரும் ஒன்று சேர்ந்து அன்னை பராசக்தியைப் பூசித்து மிகமகிழ்வுடன் கொண்டாடினர். அந்தத் தினம்தான் விஜயதசமி.

நவராத்திரி தினங்களில் முதல் மூன்று தினங்கள் துர்க்கையையும், அடுத்த மூன்று தினங்கள் இலக்குமியையும், இறுதி மூன்று தினங்கள் சரஸ்வதியையும் வழிபடுவது வழக்கம். அதாவது வெற்றி, செல்வம், கல்வி இம்மூன்றையும் வேண்டி வழிபடல் வேண்டும். ஒன்பதாம் நாளிரவு ஆயுத பூசை எனப்படும். ஒன்பதாம் நாளிரவு தொழில் செய்பவர் தத்தம் கருவிகளைப் பூசையில் வைத்து வணங்குவர். அதாவது "செய்யும் தொழிலே தெய்வம்" என்பதற்கு ஏற்ப ஆயுதங்களை வைத்து வணங்குவர். இந்நாளை மகாநவமி எனவும் கூறுவர்.

விஜயதசமியன்று எம்மவர்கள் நல்ல காரியங்களாகிய ஏடு தொடக்கல், ஆயுதவித்தை ஆரம்பித்தல், வித்தியாரம்பங்கள் என்பனவற்றைச் செய்து மகிழ்வர்.

—சிவமதி சிவஞானம்

## அந்த 6 நிமிடங்கள்

'அந்த 6 நிமிடங்கள்' உலகில் வாழும் ஒவ்வொருவரின் வாழ்விலும் முக்கியமானது.

500 கோடி மக்களுக்கு மேல் உலகில் இன்று வாழ்கின்றனர்.

5 தினங்களுக்கு ஒருமுறை பத்து லட்சம் குழந்தைகள் பிறந்து கொண்டிருக்கின்றன.

ஆண்டு தோறும் 8.5 கோடியினல் மக்கள் தொகை அதிகரிக்கின்றது.

கடந்த 35 ஆண்டுகளில் உலக சனத் தொகை, 200 கோடியினல் அதிகரித்தது.

அடுத்த 35 ஆண்டுகளில் மேலும் 300 கோடியினல் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

பத்துக்கு ஒன்பது குழந்தைகள் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில்தான் பிறக்கின்றன.

இந்த நிலையில் வானவெளியில் மேடை அமைத்து அதில் இருந்து எதிரி நாடுகளை ஏவாயுதங்களால் தாக்கும் திட்டம் ஒன்றை அமெரிக்கா செயல்படுத்த உள்ளது.

அப்படி அமெரிக்கா தாக்கினல் 6 நிமிடங்களில் உலகம் அழிந்துவிடும்.

'அந்த 6 நிமிடங்கள்' வினடிகளாக குறைக்கப்படுவதற்கு முதல் ஆயுத உற்பத்தி போட்டிக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டு என்பதில் சமாதானம் பேணும் உலகத் தவர்கள் அக்கறையாக உள்ளனர். —ராஜா

# கணனி நிகழ்ச்சித் திட்டம்


(COMPUTER PROGRAM -BASIC உயர்மட்ட மொழியில்)

BASIC : Beginners All Purpose Instruction Code

உங்கள் ஊகம் சரியா?

நீங்கள், கணனி நினைக்கும் எண்ணை ஊகித்துக் கண்டு கொள்வதற்கான ஒரு நிகழ்ச்சித்திட்டம் மைக்கிரோ கணனிகளுக்குக் கீழே தரப்பட்டுள்ளது.

எங்கே உங்கள் ஊகத்தை ஆரம்பியுங்கள். எவர் குறைந்த தடவையில் சரியாக ஊகிக்கிறாரோ அவரே வெற்றி பெற்றவராவார்! இங்கே மூன்று தடவைக்குள் குறிப்பிட்ட எண்ணை ஊகிப்பதற்குச் சந்தர்ப்பம் கொடுபடுகிறது. இதே போட்டி மீண்டும் நீங்கள் விரும்பும்வரை கணனியின் வேறு ஊகங்களுக்கு நிகழ்கிறது.




```
10 RANDOM
20 INPUT "RANGE OF GUESSING NUMBERS" ; N
30 B=RND (N)
40 FOR I=1 TO 3
50 INPUT "PICK YOUR NUMBER"; Y
60 IF B=Y THEN GOTO 110
70 LPRINT "YOUR ANSWER IS WRONG"
80 NEXT I
90 LPRINT "CORRECT ANSWER IS "; B
100 GOTO 120
110 LPRINT "YOUR ANSWER IS CORRECT"; B
120 INPUT "DO YOU WANT TO PLAY AGAIN"; A$
130 IF A$= "Y" THEN CLS :GOTO 30
140 END
```

ஆக்கம்; C. ஸ்ரீ நந்தகுமார்

## * * * * * * * * தாய் * * * * * * * *

பெற்ற தாயை அன்போடு போற்றிவருவது கடமை. சிலர் ஒரு குறிப்பிட்ட காலம் வரையில்தான் அவ்வாறு கடமையைச் செய்கிறார்கள். அதற்குப் பிறகு மாறிவிடுகின்றார்கள். திருமணம் ஆகும் வரையில் தாயிடம் அன்பு செலுத்துகின்றார்கள். அதற்குப் பிறகும் சில ஆண்டுகள் வரையில் சிலர் அன்பு செலுத்தி வருகின்றார்கள். மனைவியின் பாசம் வளர்ந்த பிறகு அந்த அன்பு சிறிது சிறிதாகக் குறைந்து நாளடைவில் அடியோடு இல்லாமல் போவதும் உண்டு.

தெளிவான அறிவும் கடமை உணர்ச்சியும் உடையவர்கள் இவ்வாறு மாறுவதே இல்லை.

தாயிடமும் மனைவியிடமும் ஒருங்கே அன்பு செலுத்த அவர்களால் முடியும்.

— டாக்டர் மு. வரதராசன்.

# சமய வாழ்வு அடக்கமான வாழ்வு

மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம்

மக்கள் வாழ்க்கை படிமுறை வளர்ச்சியடைந்து மிக உயர்ந்த நிலை அடைந்த போது அவர்களுக்கு இறையுணர்வு தோன்றியது. தனக்கு மேலாக ஒரு சக்தி உள்ளது என்றும் அனைத்துலகையும் அதுவே இயக்குகின்றது எனவும் உணர்ந்தார்கள். மக்கள் தம் அறிவு ஆற்றல் அனுபவம் என்பவற்றுக்கு ஏற்ப அதனைக் கடவுள், இறைவன், பரம்பொருள் என அழைத்தனர். தமக்கு தீயசக்திகளால் துன்பம் ஏற்படாமல் இருக்கவும், நன்மை ஏற்படவும் இறைவனைப் பல சந்தர்ப்பங்களில் நினைத்து மகிழ்ந்தனர். இறை சிந்தனை இறைவழிபாட்டுக்கும், ஆலயவழிபாட்டுக்கும் வழிவகுத்தது.

இறைசிந்தனை இன்றியமையாதது என்று நாயன்மார்கள் நன்கு வலியுறுத்தியுள்ளனர். திருநாமம் ஐந்தெழுத்தும் ஓதாதவர்கள், இறைவன் பெரும்புகழைப் பேசாதவர்கள், ஆலயங்களுக்குச் செல்லாதவர்கள், மலரிட்டு வணங்காதவர்கள் பிறப்பதும் இறப்பதுமாகத் தமது காலத்தை வீணுக்குவார்கள் என்று அப்பர் சுவாமிகளுடைய ஒரு பாடல் கூறுகிறது.

இறைசிந்தனை இன்றியமையாதது என்பதை நாயன்மார்கள் தங்களுடைய அருளனுபவம் மூலம் நன்கு விளக்கியுள்ளனர். மனிதப் பிறவியின் பெருநோக்கம் நிலையான பேரின்பப் பெரு வாழ்வு பெறுவதே யாகும். மக்கள் வாழ்வு சீரிய நெறியில் அமையவும் வாழ்க்கையின் நோக்கம் நிறைவேறவும் கடவுள் பற்றிய சிந்தனை வலியுறுத்தப்பட்டது.

இறைவன் அன்பே உருவமாக, கருணைக் கடலாக, அடியார்க்கு எளியனுக, பக்தர்கள் குற்றம் புரிந்தாலும் குணமெனக் கொள்ளும் தன்மையாளனுக விளங்குகிருன். கல்லால் எறிந்து வழிபட்ட சாக்கிய முனிவர்க்கும், வலைபின்னி வணங்கிய சிலந்திக்கும், கண்ணப்பருக்கும் அருள் பாலித்த அண்ணல் அடியார்கள் மெய்யன்புடன் வணங்கினுல் காட்சியளிப்பான் என்பது திண்ணம். ஞானக்குழந்தையின் அழுகையொலி கேட்ட பொழுதும், மார்க்கண்டேயர் இறைவனே கதி என்று அடைந்தபொழுதும், பூசலார் நாயனுல் மனதில் ஓர் ஆலயம்கட்டிய சமயத்திலும், கைலைநாதன் காட்சியளித்து அருள்புரிந்த புனித நிகழ்ச்சிகள் பல உள.

மணிவாசகர் ''இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க'' என்று கூறுவது இறைசிந்தனையின் இன்றியமையாத தன்மையை விளக்குகிறது. தான் புழுவாகப் பிறந்தாலும் இறைசிந்தனை தனது மனதை விட்டகலக்கூடாது என அப்பர் சுவாமிகள் கூறியுள்ளார். இறைசிந்தனையால் உந்தப்பட்ட மக்கள் ஆலயவழிபாடு செய்து இறைவனருளைச் சுலபமாகப் பெற்றுக் கொள்வார்கள் என்பதை நாயன்மார்கள் வரலாறு மூலம் அறிய முடிகிறது. சீர்காழிப் பதியிலே சம்பந்தரும், திருவதிகையில் அப்பரும், திருவெண்ணை நல்லூரில் சுந்தரரும் இறையருள் பெற்று மகிழ்ந்தனர். நாயன்மார்கள் தலயாத்திரை மேற்கொண்டு ஆலயங்களுக்குச் சென்று வழிபாடு செய்துள்ளனர்.

அருளாளர்கள் பக்திப் பாடல்கள் மூலம் இறைவனுடன் உரையாடி, உறவாடி மக்களுக்கு அரிய பெரிய கருத்துகளை அறிவுறுத்தியுள்ளனர். ''தமிழோடிசை பாட மறந்தறியாதவராக அப்பர் சுவாமிகள் விளங்கினுர். தினமும் காலை, மாலை வழிபாடு செய்யும் பொழுதும் ஆலய வழிபாடு செய்யும் பொழுதும் திருமுறைகளை நாம் பண்ணேடு பாடி இறைவனை இசைவிக்க முடியும். அப்பரும், சம்பந்தரும் பாடிய பாடல்களைத் தான் பாடியதாக சுந்தரர் குறிப்பிட்டுள்ளார். திருமுறைகள் வேதங்களுக்கு நிகராக விளங்கும் மந்திர சக்தி வாய்ந்த பாடல்கள். எனவே திருமுறைகளை ஓதுவதன் மூலம் நமது எண்ணங்கள் எளிதாக நிறைவுறும்.

மக்கள் அன்றாட வாழ்க்கையில் சமயத்தைக் கைக் கொள்ளுபவர்களாக, சமய வாழ்க்கை வாழ்பவர்களாக விளங்க வேண்டும். சமய வாழ்வுமூலம் அடக்கமான, அமைதியான வாழ்வு அமையும்.

# வானம்பாடியின் புதிய கீதம்

சீனத்துச் சிறுவர் கதை

தூரன்

வானம்பாடி ஒன்று பொன்னுற் செய்யப்பட்ட கூட்டில் வாழ்ந்து வந்தது.சூரியஒளி கூட்டில் பட்டு பிரகாசமாக மின்னியது. அது இராசாவின் பொன் மாளிகை போலத் தோன்றியது. கூட்டுக்குள்ளிருந்த நீர்க்கிண்ணம் பச்சை மரகதக் கல்லால் செய்யப்பட்டது. கிண்ணத்தின் பச்சை வண்ணத்தினுல் நீரும் நிறம் பெற்றது. மழை பெய்த பின்னுள்ள தாமரைக் குளம் போல அது காட்சியளித்தது. வானம்பாடியின் உணவுத் தட்டு தவிட்டு நிற மணியினுல் ஆக்கப்பட்டிருந்தது. வானம்பாடி வந்து அமர்வதற்காக மூன்று கிளைகள் யானைத் தந்தத்தால் செய்யப்பட்டிருந்தன. இரவில் கூடு மிகச்சிறந்த பட்டுத் துணியால் மூடப்பட்டது.

வானம்பாடியின் இறக்கைகள் பளபளப்பாகவும்மெதுமையாகவும் வழுவழுப்பாகவும்இருந்தன.

அதற்கு மிக உயர்ந்த உணவு கொடுக்கப்பட்டது. ஒவ்வொரு நாளும் அது இரு முறை நீராடியது. கூட்டுக்குள்ளே அது இன்பமாக வாழ்ந்தது. ஒவ்வொரு முறையும் உணவு உண்டு, நீராடிய பின் அது கூட்டுக்குள் தத்தித் திரியும். களைத்துப் போனுல் அது தந்தத்தால் ஆன கிளையில் இருந்து ஓய்வெடுக்கும். பின் அது தன் சொண்டினுல் செட்டைகளைக் கோதி விடும். உடலை நிமிர்த்தும் செட்டை அடிக்கும். சுற்று முற்றும் பார்த்தபின் முன்னும் பின்னுமாகத் தத்தித் திரியும்.

வானம் பாடியின் பாட்டு மென்மையானது. இனிமையானது வானம் பாடியின் கானத்தை கேட்டோர் அதன் இனிமையில் தம்மையே மறந்து போவர்.

அந்த வானம் பாடியைப் பணக்காரன் ஒருவனின் மகன் வளர்த்தான். அவனுக்கு வானம்பாடி மீது மிகுந்த அன்பு. அவன் ஒவ்வொரு நாளும் மலைக்குச் சென்று அருவி நீரைக் கொண்டு வந்து மிகக் கவனமாக அதனைவடித்து அதற்குக் கொடுத்தான். அதற்குக் கொடுத்த தினை அரிசியை அவன் கவனமாகத் தேர்ந்தெடுத்துக் கழுவிக் கொடுத்தான். எதற்காக அவன் இத்தனை கஷ்டங்களையும் பட்டான்? வானம் பாடிக்கு அவ்வளவு விலை உயர்ந்த கூட்டைப் பயன்படுத்தினுன்? வானம்பாடியின் இனிய பாடலைக் கேட்கவிரும்பியதனுல் அவன் அவ்வாறெல்லாம் செய்தான். வானம்பாடியை விட வேறு எதுவும் அவனுக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தரமுடியாது என்று அவன் எண்ணினுன்,

தான் பாடுவதை அவன் ஆசையோடு கேட்கிறுன்; அவன் தன்னை நன்ருகப் பராமரிக்கிறுன் என்பதனுல் வானம்பாடி தன்னுல் முடிந்தவரை அவனுக்காகப் பாடியது. சோர்ந்து, களைத்த நிலையிலும்கூட அது அவனுக்காகப் பாடியது, தன்னுடைய இசையில் என்ன கவர்ச்சி என்பதை அதனுல்புரிந்துகொள்ள முடியவில்லை. அவனுக்கு அதன் பாடலில் ஏன் அவ்வளவுஈடுபாடு என்பதும் அதற்கு விளங்கவில்லை. ஆனுல் அவன் தனது பாடலைக் கேட்க விரும்புகிறுன் என்பதை மட்டும் அது உணர்ந்திருந்தது. எனவே, அவனுக்காக அது பாடியது.

அவன் தனது கூட்டாளிகளையும் சகோதரர்களையும் அடிக்கடி கூட்டுக்கு அருகே அழைத்து வருவான் ''எனது வானம் பாடி அதிசயமானது. அது இனிமையாகப் பாடுகிறது. வாருங்கள். கேட்டுப் பாருங்கள்'' என்று கூறுவான். அவர்கள் வருவார்கள்; பார்ப்பார்கள்; கேட்பார்கள்.

அதனை வானளாவப் புகழ்வார்கள். ''எனது குரலில் என்ன சிறப்பு உள்ளது, அவர்கள் ஏன் எனது குரலைக் கேட்க விரும்புகிறார்கள்? எனக்கு ஒன்றும் விளங்கவில்லை. ஆனாலும் அவன் அவர்களை அழைத்து வருகிறான். நான்பாடி அவர்களை மகிழ்விக்கா விட்டால் அவன் ஏமாந்து போவான்.'' என அது எண்ணியது. எனவே அது தன் சக்தி முழுவதையும் சேர்த்துப் பாடியது.

நாட்கள் ஒவ்வொன்றாக நகர்ந்தன. வாழ்க்கை வழமை போல நடந்தது. எல்லாம் நன்றாக அமைந்தன. வானம்பாடி அவனுக்காகப் பாடியது. அவனது சகோதரர்களுக்காகப் பாடியது. அவனது நண்பர்களுக்காகப் பாடியது. ஆனால் தனது பாடலில் அத்தனை கவர்ச்சி ஏன் என்பதை மட்டும் அதனால் புரிந்து கொள்ள முடியவில்லை.

அவனது விசித்திரமான ஆசைக்கான காரணத்தை அறியாது அது குழம்பியது. காரணத்தைக் கண்டறிய ஆவல் கொண்டது. ஒரு நாள் அவன் உணவும் நீரும் வைத்த பின் கூண்டின் கதவைப் பூட்ட மறந்து விட்டான். கதவு திறந்தபடி கிடந்தது. வானம்பாடி தத்தித் தத்திக் கதவருகே வந்தது; சுற்றும் முற்றும் பார்த்தது; கூட்டுக்கு வெளியே சென்றது; வீட்டுக் கூரை வரை பறந்தது. அது தன்னைச் சுற்றியுள்ள இடங்களைப் பார்த்தது. அது கண்ட காட்சிகள் வியப்புக்கு உரியவையாகவும் அழகாகவும் இருந்தன.

நீலவானில் பஞ்சு போன்ற மேகங்கள் படகு போல நீந்திச் சென்றன. அழகிய மரக்கிளைகள் காற்றில் அசைந்தாடின. மரங்கள் பூத்துக் குலுங்கின. தூரத்திலே பனிபடர்ந்த மலை தெரிந்தது. நித்திரை மயக்கம் முற்றாக மாறாத நிலையில் ஒரு படத்தைப் பார்ப்பது போல அது மங்கலாகத் தெரிந்தது. அது சூழலில் உள்ளவற்றைப் புதிது புதிதாகக் கண்டது. அதன் மகிழ்ச்சி வளர்ந்தது. அது ஓர் இடத்தில் நின்றும் நீண்ட தூரம் பார்த்தது.

அதன் இதயம் உயர உயரப் பறந்தது. அது கூட்டை மறந்தது. கூட்டில் வாழ்ந்த வாழ்வை மறந்தது. புதுமை மயக்கத்தில் எங்கே போகிறேன் என்ற எண்ணம் இல்லாமல் அது தொடர்ந்து பறந்தது. பச்சைப் புல் வெளிகள், மணற்பரப்புக்கள், அலை புரளும் கடல், சேறு நிரம்பிக் கலங்கியிருந்த ஆறு - இவற்றையெல்லாம் கடந்து அது சென்று கொண்டிருந்தது.

அது செட்டையை மெதுவாக அடித்துக் கீழ் நோக்கி இறங்கியது. ஒரு பெரிய நகரத்தின் கோபுர வாயிற் கதவில் அது வந்து இருந்தது. வீதியில் பலர் நடந்து சென்றனர். வண்டிகள் சென்றன. குதிரைகள் ஓடின. இக் காட்சிகளைப் பார்த்துக் கொண்டு வானம்பாடி ஓய்ந்து இருந்தது.

-வளரும்

[சீனத்துச் சிறுவர் கதைத் தொகுதி யிலிருந்து தமிழாக்கப் பெற்றது. THE SCARE CROW by Yeh Sheng Tao.]

## முருகன் கோயில் திருவிழா

முருகன் கோயில் திருவிழா
முருகன் கோயில் திருவிழா
மூன்று பத்து நாள்களாம்
மூன்று பத்து நாளிலும்
முருகன் பாதம் வணங்குவோம்
தங்கத் தேரில் முருகனும்
தயவாய்ப் பவனி வருகையில்
எங்கும் மக்கள் கூடியே
எழுச்சியோடு வணங்குவார்
எங்கள் முருகன் என்றுமே
எழிலார் இன்பம் தருகுவான்
எங்கள் துன்பம் போக்குவான்
எங்கள் இன்பம் பெருக்குவான்

**செல்வி. பே. வையந்தி**
யாழ் இந்துமகளிர் கல்லூரி



# மாணவர்களும் அண்ணுவும்

மாணவர்களிடம் எப்பொழுதும் தனியான மதிப்பு வைத்திருந்தவர் பேரறிஞர் அண்ணு. மாணவர் தொடர்புள்ள எந்தச் சிறுபிரச்சனையாக இருந்தாலும் அதில் மிகுந்த அக்கறை செலுத்தினுர். அண்ணு முதல் அமைச்சராக இருந்த காலத்தில் சென்னையில் நடைபெற்ற மாணவர் கலந்து கொண்ட ஒரு விழாவில் இரண்டு கல்லூரிகளுக்கிடையே மோதல் ஏற்பட்டது.

இந்த விடயம் பற்றி ஒரு பிரபல நாளிதழில் வெளிவந்த செய்தி காரணமாக பச்சையப்பன் கல்லூரி மாணவர்கள் கொதித்தெழுந்தார்கள். அந்த நாளிதழ் அலுவலகத்திற்கருகே ஆர்ப்பாட்டம் செய்யக் கூடினுர்கள். அந்தச் செய்தி அண்ணுவுக்கு எட்டியதும் அந்த இடத்திற்கே வந்து மாணவர் தலைவர் திரு. சனுர்த்தனனை சந்தித்து முழு விபரங்களையும் தெரிந்து கொண்டார்.

"பத்திரிகைகளுக்குச் செய்தி வெளியிடச் சில உரிமைகள் இருக்கின்றன. ஜனநாயக நாட்டில் அந்த உரிமையை நாம் மிகவும் மதித்தாக வேண்டும்." என்று மாணவர்கள் மத்தியில் அன்போடு, அமைதியாக எடுத்துரைத்தார். தமிழ் நாடு முதல்வருக்குரிய குரலாக மட்டுமன்றி அதில் ஒரு தந்தைக்குரிய பாச உணர்ச்சியும் நிரம்பி நின்றது. அண்ணுவின் சொற்களைப் பெரிதும் மதித்து மாணவர்கள் அங்கிருந்து அமைதியோடு கலைந்து சென்றுர்கள்.

# அப்பா அம்மா சொன்னபடி

ச. வே. பஞ்சாட்சரம்

அப்பா இறைவா கும்பிட்டேன்
அருள் கொண்டென்னை வளர்த்துவிடு
அப்பா அம்மா சொன்னபடி
அல்லும் பகலும் கும்பிடுவேன்.

பொல்லாங் கொன்றும் செய்யாமல்
பொய்கள் எதுவும் பேசாமல்
நல்லவ ஞகை வாழ்ந்திடுவேன்
நன்மை செய்து வாழ்ந்திடுவேன்.

அப்பா அம்மா ஆசிரியர்
அறிவில் என்னில் பெரியவராம்
தப்பே என்பன தள்ளிடுவேன்
சரியே என்பன செய்திடுவேன்.

அப்பா இறைவா கும்பிட்டேன்
அருள்கொண் டென்னை வளர்த்துவிடு
அப்பா அம்மா சொன்னபடி
அல்லும் பகலும் கும்பிடுவேன்.


"அர்ச்சுனு" சந்தா விபரம்

| | |
|---|---|
| தனிப்பிரதி | -- ரூபா -- 3 - 00 |
| வருட சந்தா | -- ரூபா -- 36 - 00 |
| ஆறு மாதச் சந்தா | -- ரூபா -- 18 - 00 |

(அஞ்சல் செலவு தனி)

உங்கள் பிரதிகளுக்கு முன்கூட்டியே பதிவு செய்துகொள்ளுங்கள்.

தொடர்பு: விநியோக மேலாளர்
"அர்ச்சுனு"
அஞ்சல் பெட்டி எண்: 23,
யாழ்ப்பாணம்,
இலங்கை.

# அறிவுலக அறிமுகம்

கலாநிதி சபா ஜெயராசா

## காற்றுடியின் கதை

பாலா ஒரு காற்றாடி செய்தான். காற்று வீசத் தொடங்கியது. சோளகம் பிறந்துவிட்டது. அப்பாடா! காற்று எக்காளம் போட்டு வீசியது.

பாலா பாடத் தொடங்கினன்.

காற்ருடி காற்ருடி
எங்கே போவாய்?
காற்றைக் குடைந்து
சுழலப் போவேன்!

அவன் காற்றுப் பக்கமாகத் திரும்பினன். காற்ருடி வேகமாகச் சுழன்றது. ''விர்'' என்ற சத்தம் பிறந்தது. வட்டத்தட்டுப் போன்று காற்ருடி காட்சி தந்தது.

பாலா மேலும் பாடினன்.

காற்ருடி காற்ருடி
எங்கே போவாய்?
கைகளை வீசிச்
சுழலப் போவேன்!

அப்போது ஆசிரியர் அங்கு வந்தார். ''காற்ருடியின் கதை தெரியுமா?'' என்ருர். கதை என்றதும் பாலா துள்ளினன். ஒரே மகிழ்ச்சி.

காற்றின் விசையாற் காற்ருடி சுழலும். காற்ருடி சுழல அதைக் கொண்டு வேலைகள் செய்யலாம். நீர் இறைக்கலாம். நெல் குற்றலாம். மின்வலுவும் பிறப்பிக்கலாம். அவற்றுக்குப் பெரிய காற்ருடி வேண்டும்.

பெரிய காற்ருடி அதிக சக்தியைத் தரும். ஆரம்பத்திலே தூண்களை நிறுத்திப் பெரிய காற்ருடிகளைப் பொருத்தினர்கள். அது ஜேர்மன் காற்ருடி முறை எனப்பட்டது.

அதனிலும் பெரிய காற்ருடியை எவ்வாறு பொருத்தலாம் என எண்ணினர்கள். ஒரு பெரிய கோபுரத்தைக் கட்டினர்கள். அதில் மிகவும் பெரிய காற்ருடியைப் பொருத்தினர்கள். அது ஒல்லாந்துக் காற்ருடி முறை எனப்பட்டது.

அது பெரிய காற்ருடி ஆலை. இரவிலும் காற்று; பகலிலும் காற்று. காற்ருடி இரவு பகலாகச் சுழன்றது. பெரிய காற்ருடி! பெரிய சத்தம்.

அந்தக் காற்ருடி ஆலையிலே சோளத்தைக் குற்றினர்கள். கோதுமையைக் குற்றினர்கள். மனிதர் செய்த வேலையைக் காற்றுச் செய்தது. காற்றுக்குக் காசு கொடுக்க வேண்டியதில்லை. அது சும்மா கிடைக்கின்றது. யாரும் காற்றைப் பயன் படுத்தலாம். காற்றுப் பொதுச் சொத்து.

போர்த்துக்கல் நாடு காற்ருடிகளின் நாடு என்றும் கூறப்படும். சோளம் அரைக்கவும் நீர் இறைக்கவும் அங்கு காற்ருடிகளைப் பயன்படுத்துகிருர்கள்.

ஆசிரியர் உற்சாகத்துடன் பேசிக் கொண்டிருந்தார். அப்போது படபட வென்று சத்தங் கேட்டது. வானத்தில் ஒரு ஹெலிக்கொப்டர் வட்டமிட்டது. அதில் ஒரு பெரிய காற்ருடி பொருத்தப்பட்டிருந்தது. அது இயந்திரத்தால் இயக்கப்படும் காற்ருடி. அங்கே பறப்பதற்கும் காற்ருடி துணைசெய்கின்றது.

காற்ருடியின் கதைக்கு முந்தியது சில்லின் கதை. உருளும் மரக் குற்றிகளைப் புராதன மனிதன் கண்டான். பெரும் பொருள்களை நகர்த்துவதற்கு உருளைக் குற்றிகள் துணை புரிந்தன. அவற்றிலிருந்து சில்லைக் கண்டு பிடித்தான்.

வண்டியும் தேரும் சில்லால் இயக்கப் பெற்றன. சில்லுச் சுழன்றது. வண்டியோடியது. உலோகங்களினல் உறுதியான சில்லுச் செய்யப்பட்டது.

காற்றினற் சுழன்றது காற்ருடி. நீரினற் சுழன்றது நீர்ச்சில்லு. ஓடும் நீருக்குக் குறுக்கே மனிதன் சில்லை நிறுத்தினன். சில்லு சுழன்றது. இயந்திரம் இயங்கியது. வேலைகள் இலகுவாக்கப் பட்டன. வேலைகளை இலகுவாக்குவதிலே மனிதர் வெற்றி காணுகின்றனர்.

பாலாவின் கையிலிருந்த காற்ருடி வேகமாகச் சுழன்றது. இப்போ காற்றுப் பலமாக வீசுவதைக் கண்டான்.

காற்ருடி காற்ருடி
எங்கே போவாய்?
காற்று வெளியில்
நீந்தப் போவேன்!

# குருவி பிடிக்கப் போய் பாம்பு துரத்திய கதை

மாஸ்டர் சிவலிங்கம்

அப்போது எனக்குப் பத்து வயது. நான் மட்டக்களப்பு கல்லடி- உப்போடை சிவானந்த வித்தியாலயத்தில் படித்துக் கொண்டிருந்தேன்.

எனது முக்கிய பொழுது போக்கு குருவிக்குஞ்சு பிடிப்பது. குருவிக் குஞ்சு பிடித்து நண்பர்களுக்குக் கொடுத்து விட்டு, அவர்களிடமிருந்து மாங்காய், கடலை, பனுட்டு போன்றவற்றைப் பெற்றுக் கொள்வதில் எனக்குப் பெருமகிழ்ச்சி.

பாடசாலை செல்லும் நேரம் போக மற்ற நேரங்களிலெல்லாம் பெரும்பாலும் குருவிக்குஞ்சு பிடிக்கும் வேலையிலேயே ஈடுபட்டு வந்தேன்.

"சுதந்திரமாகத் திரியும் குருவிக்குஞ்சுகளை பிடித்து அடைத்து வைப்பது மகாபாவம். அப்படிச் செய்தால் நமக்குக் கடவுள் தண்டனை தருவார்" என்று எனது அம்மா அடிக்கடி புத்திமதி கூறுவதுண்டு.

என்றாலும் அந்தப் புத்திமதிகள் எனது செவிகளில் சரியாகப் புக மறுத்தன.

ஒரு நாள் மத்தியானம், நான் பாடசாலையிலிருந்து வீடு திரும்பிக் கொண்டிருந்தேன். எங்கள் வீட்டிற்குச் சற்றுத் தொலைவில் உள்ள முந்திரிகை மரம் ஒன்றின் பொந்தில் இருந்து குக்குறுப்பாச்சான் குருவியொன்று வெளியே பறந்து சென்றதைக் கண்டேன்.

உடனே புத்தகங்களைக் கீழே வைத்து விட்டு அந்த முந்திரிகை மரத்தில் அவசர அவசரமாக ஏறினேன். மிகவும் சிரமப்பட்டு அந்த மரப் பொந்தினுள் கையை விட்டுத் தடவிப் பார்த்தேன்.

அந்த மரப் பொந்தினுள் இருந்த குருவிக் கூட்டுக்குள் ஐந்து குருவிக் குஞ்சுகள் தட்டுப்பட்டன. ஒரு குருவிக்குஞ்சை மெதுவாக வெளியே எடுத்துப் பார்த்தேன்.

அந்தக் குருவிக் குஞ்சுக்குப் போதியளவு சிறகு முளைக்கவில்லை. சிறகு முளைத்து அது பறக்க சில தினங்கள் செல்லும் என்பதை உணர்ந்து கொண்டேன். அந்தக் குருவிக் குஞ்சை மரப் பொந்திற்குள் விட்டு விட்டு மகிழ்ச்சியுடன் வீட்டுக்குச் சென்றேன்.

அடுத்த நாள் பாடசாலையில் நண்பர்களிடம் குக்குறுப்பார்ச்சான குருவிக்குஞ்சுகள் பற்றிக் கூறினேன். தங்களுக்கு ஒவ்வொரு குருவிக் குஞ்சு தரும்படி ஐந்து பேர் வேண்டுகோள் விடுத்ததுடன் அன்பளிப்புகளும் முன் கூட்டியே வழங்கினர். அடுத்த வாரம் குருவிக்குஞ்சு தருவதாக அவர்களிடம் தெரிவித்தேன்.

ஒரு வாரத்தின் பின்பு பாடசாலைக்குச் செல்லும் போது குருவிக்குஞ்சுகள் கொண்டு செல்வதற்குரிய பெட்டி ஒன்றையும் கொண்டு சென்றேன். புத்தங்களைக் கீழே வைத்துவிட்டு ஓசைப் படாமல் குருவிக் கூடிருந்த முந்திரிகை மரத்தில் பூனையைப் போல ஏறினேன். பொந்தை நெருங்கியதும் மெதுவாக பொந்திற்குள் கையை விட்டுத் தடவிப் பார்த்தேன் அதற்குள் ...!

குருவிக் குஞ்சுகளுக்குப் பதிலாக 'நொழு நொழு' என்று வழுவழுப்பாக ஏதோ தட்டுப்பட்டது. உடனே எனது உடல் சிலிர்த்தது. மரப்பொந்திற்குள் இருந்த அதனை வெளியே எடுத்துப் பார்க்கும் எண்ணத்துடன் அழுத்திப் பிடித்தேன். அடுத்த கணம் ...!

"உஷ்!" என்று பயங்கரமாகச் சீறியபடி எழுந்தது அந்தப் பாம்பு. "ஐயோ" என்று அலறியபடி கீழே விழுந்தேன். எனது உடல் நடுங்கிக்கொண்டிருந்தது.

குருவிக்குஞ்சுகளைப் பிடித்து விழுங்கி விட்டுப்படுத்திருந்த புடையன் பாம்பைத்தான் நான் அழுத்திப் பிடித்திருக்கிறேன் என்பது எனக்குப் பின்புதான் புரிந்தது.

மரப்பொந்திலிருந்து புடையன் பாம்பு வெளியே எட்டிப் பார்ப்பதைக் கண்டதும் புத்தகங்களையும் விட்டு விட்டு அலறியடித்துக் கொண்டு ஓட்டம் பிடித்தேன்.

அன்றிலிருந்து குருவிக்குஞ்சு பிடிக்கும் எண்ணத்தையே விட்டு விட்டேன். அம்மா சொன்ன புத்திமதி நினைவுக்கு வந்தது.

## கைவிரல் பருமனில் டெலிவிஷன் கமரா

கைவிரலிலும் பார்க்க சிறிதுபருமனை அளவில்டெலிவிஷன்கமரா ஒன்றை ஜப்பான் நிறுவனம்ஒன்று கண்டுபிடித்துள்ளது.

சில சென்டிமீட்டர் நீளமான இக் கமரா மூலம் பல்வைத்தியர்கள் நோயாளிகளின் பற்களை இலகுவாகப் பரிசோதிக்க முடியும்.

—தீபன்

# வள்ளுவத்தில் அறிவியல்



அவர் கருத்தில்

|

v

இவர் கருத்து



வள்ளுவர் மனிதனின் இன்றியமையாத் தேவை அறிவுடைமையே என்றார். அறிவை முதனிலைப் படுத்தி முன்னிறுத்தியது போல், திருவள்ளுவர் வேறு எதனையும் முன்னிறுத்த வில்லை.

'' அறிவுடையார் எல்லாம் உடையார் அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர். ''

என்று கூறுகிறார்.

அறிவின்றி வேறு எவை எவை பெற்றிருந்தாலும், அவற்றால் பயனில்லை என்கிறார். திருவள்ளுவர் அறிவு பற்றிக் கூறும் கருத்து அறிவியலுக்கு ஒத்தது. பலர் பல நூற்கள் கற்ற புலமையை அல்லது செய்திகள் அறிந்து கொண்டமையை அவற்றை எடுத்துச் சொல்லும் திறனையெல்லாம் அறிவு என்று கருதிக் கொண்டிருக்கின்றனர். திருக்குறள், கற்பதையும் கேட்பதையும் அறிவு பெறுதற்குரிய வாயிலாகக் கருதுகிறதே தவிர, அவை தம்மையே அறிவு என்று கருதவில்லை.

கல்வியும் கேள்வியும் வாழ்க்கைப் பட்டறையில் சோதனை செய்யப் பெற்று அனுபவத்திற் குரியனவாகி உயிர்க்குரிய குணமாவும், சீலமாகவும் அல்லது ஒழுக்கமாகவும் அது வடிவம் கொள்ளும் பொழுதே அறிவு என்ற நிலையை அடைகிறது.

**தவத்திரு குன்றக்குடி அடிகளார்**

## புதியமுறை

கைவிரல் அடையாளங்களைக் கொண்டுதான் குற்றவாளிகளைப் பொலீசார் கண்டு பிடிப்பது இப்போதைய குற்றத்தடுப்பு முறை.


இனி உதடுரேகைகளைக் கொண்டும் கண்டுபிடிக்கலாம் என்று அறிவிக்கப்படுகிறது.

ஜப்பானிய டாக்டர் ஒருவரின் ஆராய்ச்சியைத் தொடர்ந்தே இந்தப்புதிய ரக முறை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அந்த டாக்டரின் பெயர் கே. ஸுஸுகி. தன்னிடம் வரும் நோயாளர்களின் உதடுகளை அவர் பரிசோதனை செய்து வந்தார். குழந்தை முதல் முதியோர் வரையானவர்களின் ரேகைகளைஅவர்ஆராய்ச்சி செய்ததில் உதடு ரேகைகள், இறுதிவரை மாற்றம் காணுவதில்லை என்பதைக் கண்டுபிடித்தார்.

இதைத்தொடர்ந்து டோக்கியோ பொலீசார் சந்தேக நபர்களின் கைரேகைகளுடன் அவர்களின் உதட்டுரேகைகளையும் பதிவு செய்து பேணுவதில் அதிகஅக்கறை காட்டி வருகின்றனர்.

-தீபன்



# குட்டி மாமா

இணுவையூர்-விசந்தன்

யாழ்ப்பாணத்திலுள்ள ஓர் சிறு கிராமம். அந்தக் கிராமம் நகரத்திலிருந்து பல மைல் தொலைவில் இருக்கின்றது. அக் கிராமத்தவர்கள் பெரும்பாலோர் கமக்காரர்கள். அவர்கள் எல்லோரும் கடின உழைப்பாளிகள். இரவு பகல் என்று பாரமல் தோட்டத்திலே பாடுபடுபவர்கள். தாங்கள் பயிரிடும் விளை பொருட்களைச் சந்தையில் விற்பனை செய்வார்கள். மரக்கறி வகைகள், உப உணவுப் பொருட்கள், பழவகைகள் என்பன முக்கியமானவை.

வாழைப்பழத்திற்குப் பெயர் பெற்ற ஊர் என்ற காரணத்தால் பெரிய வாழைத்தோட்டங்களும் அங்குண்டு. தங்கள் விளை பொருட்கள், மரக்கறிவகைகள், வாழைக்குலைகள் என்பவற்றை சுன்ஞகச் சந்தைக்குக் கொண்டு சென்று விற்பனை செய்து வருவார்கள். சந்தையிலிருந்து வீடுதிரும்பும்போது தங்களுக்கு வேண்டிய பொருட்களை வாங்கிவருவார்கள். இது அவர்களின் வழக்கமாகவே வந்துவிட்டது.

அந்தக் கிராமத்தில் தான் குட்டிமாமாவும் வசித்து வந்தார். அவருக்குச் சொந்தம் என்று சொல்வதற்கு ஒருவரும் இல்லாவிட்டாலும் ஊர் மக்களுக்கெல்லாம் அவர் குட்டிமாமா வாகவே இருந்தார். சின்னஞ் சிறுசுகள் தொடக்கம் குடு குடு கிழவர் வரை எல்லோரும் அவரை குட்டி மாமா என்றே அழைத்து வந்தனர். அவர்மேல் அக்கிராமத்து மக்கள் மிகுந்த பாசம் கொண்டிருந்தனர். அவரும் அவ்வூர் மக்களை தனது இனத்தவர்கள் என்றே எண்ணி அவர்களின் நம்பிக்கைக் குரியவராகவே வாழ்ந்து வரலானர்.

சின்னஞ்சிறு வயதிலே தாய் தந்தையரை இழந்து அனுதரவான நிலையில் இருந்தவரை வண்டில்காரச் செல்லப்பா தன்னுடனேயே கூட்டி வந்து வளர்த்து வந்தார்.

வண்டில் காரச் செல்லப்பா என்டால் அந்த ஊரில் தெரியாதவர்கள் இல்லை. ஊரிலுள்ள எந்த வைபவமாஞலும் அங்கு செல்லப்பரைக் கட்டாயம் காணலாம். அவர் எல்லோருக்கும் வேண்டியவராகவும், மதிப்பானவராகவும் இருந்தார். அவரின் வளர்ப்புப் பிள்ளையாகியகுட்டியும்எல்லோருடையஅன்பையும்பெற்றிருந்தார்.

செல்லப்பர் இறந்ததும் அவர் விட்டுச் சென்ற வண்டிலும் மாடுகள் இரண்டும் குட்டிமாமாவுக்குச் சொந்தமாகியது. தன் வளர்ப்புத் தந்தை காட்டிய வழியில் வண்டில் மாடு ஓட்டிப் பிழைப்பதும், ஊர்த் தொண்டுகள்செய்வதும் குட்டிமாமாவின் அன்ருட கடமைகளாகிவிட்டன.

ஊரின் மத்தியில் ஒரு வைரவ கோயில். அந்த வைரவரை எல்லோரும் வேம்படி வைரவர் என்று பக்தியுடனும், பயத்துடனும் சொல்லி வழிபட்டு வந்தனர். அந்தக் கோயிலின் மடத்தில் தான் குட்டிமாமா வசித்து வந்தார்.

காலையில் நான்கு மணிக்கெல்லாம் எழுந்து கோயில் மணியை அடிப்பார். தொடர்ந்து கோயில் சூழலைக் கூட்டிப் பெருக்கி சுத்தம் செய்வார். அதன் பின்பு மாடுகள் கட்டப்பட்ட இடங்களைக் கூட்டித் துப்பரவு செய்வார். மாட்டுச் சாணத்தை பிறம்பாக ஒரு கிடங்கில் சேகரித்து வைப்பார். மாடுகளைத் துடைத்து அவற்றின் முதுகில் வருடிவிடுவார். பிண்ணக்கு, தவிடு, உழுத்தங்குறுணி என்பவற்றைத் தண்ணீரில் கரைத்து வவப்பார்.

இத்தனை வேலைகளும் முடிந்த பிற்பாடுதான் பல் துலக்கி முகங் கழுவுவார். பூக்கள் கொய்து பூசைக்குத் தயாராக வைப்பார். வயிரவரைப் பக்திசிரத்தையுடன் வழிபடுவார். அதன் பிறகுதான் தேநீர்குடிப்பார். அதுவும் தானே வைத்துக் குடிப்பார். தன்னுடைய

எல்லா அலுவல்களையும் தானே செய்ய வேண்டுமென்ற ஊக்கம் கொண்டவராகவே இருந்தார்.

காலையில் வேம்படி வைரவரின் மணிச்சத்தம் கேட்டுத்தான் அவ் வூர் மக்கள் விழித்தெழுவார்கள். ஊர்மக்களை நித்திரையிலிருந்து எழுப்பும் பணியையும் குட்டி மாமாவே செய்து வந்தார். அவர் மணிக்கூடு பார்ப்பதில்லை. ஆனால் அவர் விடியற்காலை நித்திரை விட்டெழுந்து கோயில் மணியை அடித்தார் என்றால் சரியாக நாலு மணியாகத்தான் இருக்கும். அந் தளவுக்குத் தினமும் நேரத்திற்கு நித்திரைவிட்டெழும்பழக்கத்தை அவர் கொண்டிருந்தார். ஊர் மக்களையும் நேரத்திற்கு எழுந்து அவரவர்களுடையதோட்டவேலை களைக் கவனிக்கச் செய்தார். பள்ளிப் பிள்ளைகளும் காலையில் எழுந்து தங்கள் பாடங்களைப் படிக்கச் செய்தார். இப்படியாக ஊர்மக்களுக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் தன் தொண் டைச் செய்து வந்தார்.

அன்று! திங்கட்கிழமை காலை தனது வழக்கமான கடமைகள் எல்லாவற்றையும் செய்துமுடித்த குட்டிமாமா தனது வண்டியில் மாவெள்ளையனையும், கள்ளக்கறு வலையும் பூட்டினார். தனது வண் டில் மாடுகளுக்கு மாவெள்ளை யன் கள்ளக் கறுவல் என்று அவை களின் நிறங்களுக்கேற்ப பெயர் சூட்டியிருந்தார்.

வண்டில் ஆசனத்தட்டில் ஏறி இருந்தார். பிடிகயிற்றை கொஞ் சம் தொய்ய விட்டு "எய்! எய்!! ஓடு" என்று பெலமாகச் சத்தம் செய்து, வலது கையில் வைத்தி ருந்த துவரந்தடியால் கள்ளக் கறுவலின் முதுகில் தடவிவிட் டார். மாடுகள் இரண்டும் சதங்கை ஒலியை ஒலித்துக் கொண்டு வழமையான வேகத் தில் ஓட ஆரம்பித்தன.

குட்டிமாமா "வைரவா! உன்னை நம்பினேன். எல்லாம் உன் செயல்" என்று வைரவரைப் பார்த்து கும்பிட்டு விட்டு, மாடுகளை ஓட் டிச் செல்லும் பணியில் ஈடுபட் டார்.

வண்டில் கந்தையரின் வாழைத் தோட்டத்திற்குக் கிட்டவாகச் சென்று நின்றது. குட்டிமாமா வண்டியிலிருந்து இறங்கி "கந்தை யாண்ணை இண்டைக்கு இருக்கே?" என்று கேட்டபடி தோட்டத்திற்குள் இறங்கினார்.

"தம்பி நில்லடா வாறன்" என்று சொல்லியபடி ஒரு வாழைக் குலையையும் தூக்கிக் கொண்டு வந்தார். "அங்கை கிடக்கு மிச்சம் தூக்கிவா மேனை" என்று கந்தையர் குட்டி மாமா வைப் பார்த்துச் சொன்னார். குட்டிமாமாவும் கந்தையர் காட் டிய இடத்திற்குச் சென்று அங்கி ருந்த வாழைக்குலைகளை ஒவ் வொன்றாக எடுத்து வந்து வண்டி லுக்குப் பக்கத்தில் வைத்தார். அன்று கந்தையரின் பத்துக் குலை களும் ஏற்றியாகி விட்டன. அடுத் தடுத்த தோட்டங்களிலும் இரண்டு மூன்று என்று வாழைக் குலைகள் ஏற்றப்பட்டன.

வண்டில் சிறிது தூரம் சென்று ஊரின் ஒரு பக்கத்திலுள்ள வட்டு வினி என்ற குறிச்சியில் வந்து நின்றது. அந்த இடத்தில் கத் தரிக்காய், பீற்றூட், வெங்காயம் என்பன சாக்குகளில் கட்டிவைக் கப்பட்டிருந்தன. புடோல், பயற் றங்காய் என்பன வாழைச் சருகு களில் சுற்றிக் கட்டியிருந்தன. அவை எல்லாவற்றையும் குட்டிமாமா தனது வண்டியில் ஏற்றினார்.

வண்டில் சுன்னாகத்தை நோக் கிப் புறப்பட்டுவிட்டது. குட்டி மாமாவுக்கு இன்று நல்ல சந்தோ ஷம். வண்டில்நிறையச் சாமான். வருமானம்தாராளமாகக் கிடைக் கும். "வைரவா! உனக்குத் தான்" என்று வாய்க்குள் முணு முணுத்தபடி குனிந்து மாடுகளின் முதுகில் தடவிவிட்டார். மாடு கள் வேகத்தைக் கூட்டி ஓடத் தொடங்கின. குட்டிமாமா வண்டி ஆசனத்தில் கம்பீரமாக இருந்தபடி வண்டியை ஓட்டிச் சென்றார்.

வண்டில் சுன்னாகச் சந்தையைச் சென்றடைந்தது. அன்று சந்தை யில் சரியான சனக் கூட்டம். தனது வழமையான இடத்தில் குட்டிமாமா வண்டிலை நிறுத்தி னார். மாடுகளை அவிட்டு ஒரு பக்கத்தில் கட்டினார். சாமான் களை ஒவ்வொன்றாக இறக்கி உரி யவர்களிடம் ஒப்படைத்தார். கந்தையற்றை வாழைக்குலைகளை அவருடன் உதவியாகத் தூக்கிச் சென்று வாழைக்குலைச் சந்தை யில் கொடுத்தார்.

வியாபாரங்கள் எல்லாம் முடிந்து சாமான்கள் ஏற்றி வந்த எல்லோரும் வரும்வரை பார்த் துக் கொண்டு சந்தையில் நிற்பது குட்டிமாமாவின் வழக்கம். அவர் களையும் வண்டியில் கூட்டிக் கொண்டுதான் ஊருக்குச் செல் வார்.

மாடுகளுக்கு வைக்கோல் வாங்கி வந்து போட்டுவிட்டு பக் கத்திலுள்ள தேநீர் கடைக்குச் சென்று "தம்பி! ஒரு பால் தேத் தண்ணி தாமேனை" என்று சொல்லிவிட்டு அன்றைய 'உத யன்' பத்திரிகை ஒன்றை வாங் கிக் கொண்டு வாங்கொன்றில் போய் அமர்ந்து கொண்டார். சுடச்சுடப் புதினங்களையும், கூடிய செய்திகளையும் வாசிக்கலாம் என்ற அவாவால் குட்டிமாமா உதயனைத் தினமும் வாங்கி வாசித்து வந்தார். சந்தைக்கு வந்தவர்கள் வரும்வரை ஆறுத லாக இருந்து வாசிக்கலாம் என்ற நம்பிக்கையும் அவரை உதயன் பால் ஈடுபாடு காட்டச் செய்தது.

குட்டிமாமாவுக்கு ஐம்பது வய

தாவது இருக்கும். உயர்ந்த தோற்றம்; நிமிர்ந்த நடை; திடகாத்திரமான தேகம்; கறுத்துச் சுருண்ட தலைமயிர்; செந்தளிப்பான முகம்; இவையே அவரின் அங்க அடையாளங்களாகும். அவர் என்றும் இளைஞனுகவே தோற்றமளித்தார்.

திருமணத்தைப் பற்றி அவர் சிந்திக்கவே இல்லை. மதுபானம் அருந்துவதில்லை. மச்ச மாமிசம் உண்ணமாட்டார். புகைத்தலை அணுகவில்லை. சிறுவயதில் வெற்றிலை போடும் பழக்கம் இருந்து வந்ததாம். "வெற்றிலை போடுவதால் வாயில் புற்றுநோய் ஏற்படும்" என்று யாரோ சொன்ன பிற்பாடு அந்தப் பழக்கத்தையும் விட்டுவிட்டாராம்.

அத்துடன் சோர்வில்லாத ஒரு உழைப்பாளி. இப்படியான நல் ஒழுக்கமே வயதுவந்தும் அவரை இளைஞனுக வைத்திருந்தது.

குட்டிமாமா குழந்தைகள்மேல் மிகவும் பாசம் கொண்டவர். மாலை வேளைகளில் ஊர்க் குழந்தைகள், சிறுவர்களுடன் சேர்ந்து விளையாடுவார். பந்தடித்தல், தாச்சி விளையாடல், தாயம் விளையாடல் போன்ற விளையாட்டுக்களில் கூடிய ஈடுபாடு கொண்டு அந்தத் துறையிலும் பிள்ளைகளை ஊக்குவித்து வந்தார். தன் சொந்தச் செலவில் பிள்ளைகளுக்கு விளையாட்டுச் சாமான்கள் வாங்கிக் கொடுப்பார். அதனுல் அவ்வூர்ப் பிள்ளைகள் எல்லோரும் குட்டி மாமாமேல் மிகுந்த அன்புடையவர்களாகவே இருந்தார்கள்

குட்டிமாமாவுக்கு ஒரேயொரு ஆசை நீண்டகாலமாக இருந்து வந்தது. அது பற்றி ஊரிலுள்ளவர்களிடம் சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் சொல்லி வந்தார். அவர்களும் "அதுக்கென்ன நீ தொடங்கு எல்லாரும் சேர்ந்து முடிப்பம்" என்று சொல்லி வந்தார்கள். வேம்படி வைரவர் மேல் கொண்ட அளவில்லாத பற்றுக் காரணமாகவும், ஊர்மக்களின் ஊக்குவிப்புக் காரணமாகவும் எடுத்த காரியத்தை செய்து நிறைவேற்ற வேண்டுமென்ற நம்பிக்கையும் உறுதியும் அவரில் குடிகொண்டிருந்தது. தன் உழைப்பின் ஒரு பகுதியை அதற்காகவே ஒதுக்கியும் வந்தார். காலம் கனியும்போது கோயிலைப் புணருத்தாரணம் செய்து, இராஜகோபுரம் சட்டி மஹா கும்பாபிஷேகம் செய்ய வேண்டுமென்ற ஒரேயொரு ஆசையைத் தவிர வேறு ஒன்றும் அவர் மனத்தில் இருக்கவேயில்லை. அது ஒன்றே அவர் இலட்சியமாகும்.

அன்று வெள்ளிக்கிழமை. வழமைபோல் குட்டி மாமா தனது வண்டிலில் சாமான்களை ஏற்றிக்கொண்டு சுன்னுகச் சந்தைக்குப் புறப்பட்டார். ஒழுங்கைப் பாதைகளால் வண்டிலை ஓட்டி வந்து ரோட்டில் ஏறினுர். ரோட்டில் அன்று வாகனங்கள் குறைவாகவே இருந்தன. சன நடமாட்டமும் வெகு குறைவாகவே இருந்தது. குட்டிமாமாவும் ஏன் இன்று இப்படி இருக்கின்றது என்று யோசித்துக் கொன்டு வண்டிலை ஓட்டிக் கொண்டு சென்ருர். திடீரென ஒரு லொறி வேகமாக வந்து வண்டிலைக் கடந்து சிறிது முன் செல்ல .. டோம்! என்று பெரிய சத்தம் கேட்டது.

(வளரும்)

## களைப்புத் தரும் தொழில்கள்

மனிதனுக்கு அதிக களைப்பைக் கொடுக்கும் தொழில்கள் எவை?

இது பற்றி உலகில் பலநாடுகளில் பணியாற்றும் உளவியலாளர்கள் ஆய்வு ஒன்றைநடத்தினர்.

35 தொழில்கள் ஆய்வின் முடிவில் தேர்ந்தெடுக்கப்பட்டன.

அவற்றில் அதிக களைப்பைக் கொடுக்கும் என்று 3 தொழில்களை உளவியலாளர்கள் தெரிவு செய்தனர்.

அந்த விபரம் வருமாறு ;

1. சுரங்கத் தொழிலாளி 2. பொலீஸ் 3. பத்திரிகையாளர்

டாக்ஸி சாரதித்தொழில் 8 ஆவது இடத்தையும் பஸ் சாரதித்தொழில் 16 ஆவது இடத்தையும் வகிக்கின்றன.

இந்த ஆய்வின்படி மிகவும் அமைதியைக் கொடுக்கும் மூன்று தொழில்களையும் ஆராய்ச்சியாளர்கள் தெரிவு செய்துள்ளனர்.
அத்தொழில்கள் வருமாறு ;


1. வானசாஸ்திரி 2. தொல்பொருள் நிலையக் காப்பாளர் 3. நூலகர்

அமரர் சண்முகம் நினைவுக் கட்டுரைப் போட்டி - 1986

ஆரம்ப பிரிவில் முதலிடம் பெற்ற கட்டுரை

# அன்றாட வாழ்க்கையில் சமயம்

VINAYAGAR LIBRARY
ALAI WEST
CHUNNAKAM



வெலீசியா நிராஞ்சனி ஞானநந்தராஜா
(சுண்டுக்குளி மகளிர் கல்லூரி)

ஒவ்வொரு மனிதனும் ஒரு குறிக்கோளுடனேயே வாழ்கின்றான். அவனுடைய அன்றாட வாழ்க்கையில் சமயம் மிகவும் உறுதுணையாக விளங்குகிறது. நமது அன்றாட வாழ்வில் சமயத்தைக் கடைப்பிடிப்பதனால் அநேக நன்மைகள் எமக்குக் கிடைக்கின்றன.

எந்தச் சமயமாக இருந்தாலும் அது கடவுள் ஒருவரையே குறிக்கிறது. நாம் ஒரு காரியத்தைச் செய்யுமுன் நல்லபடியாக அது முடிவு பெற வேண்டுமென்று கடவுளை வேண்டி அதனை ஆரம்பிக்கின்றோம். அந்தக் காரியத்தை ஒவ்வொருவரும் தத்தம் சமய முறைப்படி ஆசாரங்கள் செய்து ஆரம்பிக்கின்றனர்.

அன்றாட வாழ்க்கையில் சமயம் ஒரு நல்ல சுகாதார வழிமுறையையும் வகுக்கிறது. விசேடமாக கோவிலுக்குப் போகுமுன் ஸ்நானம் செய்து சுத்தமான உடை அணிந்து போதல், மச்சம் தவிர்த்து மரக்கறி உண்ணுதல், சமய விழாக் காலங்களில் வீடு வாசல்களைக் கழுவிப் பெருக்கி மஞ்சள் நீர் தெளித்தல், தூபம் இடுதல் போன்றவை சமயஅனுட்டானமாகவும் அன்றாட வாழ்க்கையில் அது ஒரு சுகாதார வழி முறையாகவும் பின்னிப் பிணைந்து இருக்கிறது. இதனால் தொற்று நோய்க்கிருமிகள் முதலியன நம்மை அணுகாமல் இருக்க உதவியாகிறது.

அன்றாட வாழ்க்கையில் சமயம் மனிதனைக் கட்டுப்பாடுள்ளவனாக மாற்றி விடுகிறது. சமயக் கொள்கைகளை அன்றாட வாழ்க்கையில் கடைப்பிடிக்கும் மனிதன் சில சமய அனுட்டானங்களைச் செய்வதற்கு உபவாசம், நோன்பு, விரதம் என்பன வற்றை அனுசரித்தல், மௌனவிரதம் இருத்தல் போன்றவற்றைக் கடைப்பிடிக்கின்றான். இப்படி இவைகளைக் கடைப்பிடிப்பதனால் உடலும், உள்ளமும் பெரிய மாற்றம் அடைகின்றன. தன்னடக்கம் கட்டுப்பாட்டுடன் வாழக் கற்றுக் கொள்கிறான்.

எல்லாச்சமயங்களும் தான,தருமங்களைச் செய்யும்படி போதிக்கின்றன. எனவே நமது அன்றாட வாழ்க்கையில் தருமம் கொடுக்கப் பழகிக் கொள்வதுமல்லாமல் நாம் கொடுக்கும் தருமத்தால் ஏழை எளியவர்கள் வாழவும் வழி கிடைக்கிறது. இதனால் மனிதனை மதிக்கும்பண்பு பெறுகிறான். பிறருக்கு அன்பு செய்யக் கற்றுக் கொள்கிறான். தான் தனக்கென்று வாழாமல் மற்றவர்களுக்காகவும் வாழ சமயம் ஒரு தூண்டுகோலாக அமைகிறது.

எனவே அன்றாட வாழ்க்கையில் சமயம் ஒவ்வொரு தனிமனிதனாலும் கடைப்பிடிக்க வேண்டிய தொன்று. அதை அவன் கடைப்பிடிப்பதனால் வாழ்க்கையில் கட்டுப்பாடாக வாழ்கிறான்.

அன்றாட வாழ்க்கையில் சமய விழாக்கள், கொண்டாட்டங்களில் நாம் பங்குபற்ற வேண்டிய அவசியம் கூட ஏற்படுகிறது. இப்படியான சமய விழாக்களில் நாம் கலந்து கொள்வதால் பல்வேறு சமூகத்தவர்களின் பழக்கவழக்கங்கள், பண்பாடுகளை அறிய முடிகிறது. அவர்களது நற்பண்புகளை நாமும் பின்பற்றி எமது வாழ்வை வளமாக்க சமயம் உறுதுணை புரிகிறது. பல சமுகத்தவர்களையும் ஒரே நிலையில் வைத்து ஏற்றத் தாழ்வற்ற முறையில் அவர்களோடு பழகவும் சமயம் நமக்கு சந்தர்ப்பங்களை ஆக்கிக் கொடுக்கிறது.

# லண்டன் வாழ்வு

சுவையான அம்சங்கள்

லண்டன்!

கண்ணை மூடிக் கற்பனை செய்தால் வெள்ளையர்கள் எமது மனதில் தோன்றுவார்கள்.

நேரம் தவருமல் நடப்பதற்கு வெள்ளையரைப் பின்பற்ற வேண்டும் என எமது பெற்றேர் அடிக்கடி சொல்லி வைப்பது நினைவிற்கு வரும்....! குளிர் மிகுந்த அப் பிரதேசம் ஞாபகத்தில் தெரியும்.

உறைபனியால் மூடிக் கிடக்கும் அப் பகுதி காட்சி தரும்.

சுவையான அப்பிள் பழங்கள் நாவில் நீரை வரவழைக்கும்.

தரத்தில் உயர்ந்த பாடசாலை உபகரணங்கள் அவர்கள் மீது மதிப்பை உயர்த்தும்.

தவிர உங்களது அண்ணுவோ, அக்காவோ, மாமாவோ எடுத்து அனுப்பும் வர்ண வர்ண புகைப்படங்கள் உங்களை அங்கு கவர்ந்து இழுக்கும். எமது மாணவன் ஒருவன் அங்கு சென்றுன்.

அவனது அனுபவங்களை நீங்களும் பகிரலாமே......!

இலங்கையில் இருந்து வந்த புதிய மாணவனெருவன் லண்டன் மாநகரைச் சுற்றி வருகின்றுன். வெள்ளையர்கள், காப்பிலிகள், சீனர், பாக்கிஸ்தானியர், இந்தியர், இலங்கையர் எனப்பல வர்க்கத்தினரை அங்கு காண்கின்றுன். புதுவிதமான வாழ்க்கை முறை பலவிதமானஅனுபவங்கள்.

அதனுல் அவனது அறிவு பரந்து விரிவடைவதாகவே அவனது நெஞ்சம் அனுமானிக்கின்றது.

### வெள்ளையர்

வெள்ளைக் காரரிடம் அவன் கண்ட முதலாவது தன்மை அவர்கள் பழகும் விதம்.! எவ்வளவு சிறுவஞக இருந்தாலும் 'சேர்' போட்டுப் பேசும் அவர்களது பழக்கத்தால் அவனை அறியாமலே அவனுள் ஒரு சுய கௌரவம் முகிழ்க்கின்றது. சற்றே நெஞ்சை நிமிர்த்திக் கம்பீரமாக நடக்கப் பார்க்கின்றுன். ஆனுல் சிநேகிதமாக உறவாடுவதற்கு பாஷை சிறிது தடை ஏற்படுத்துகின்றது. ஆங்கிலத்தில் 26 எழுத்துக்கள் மட்டுமே. தமிழிலோ 247 எழுத்துக்கள். அதனுல் எம்மவர் கதைப்பதிலும் வேகம் காட்டுகின்றுர்கள் என்பது ஆங்கிலேயரின் கணிப்பு./ அப்படியெனின் 518 எழுத்துக்களை யுடைய சினரது வேகத்துக்கு வெள்ளையர் என்ன சொல்வாரோ.?

சில 'குப்பை' வெள்ளையர் அனுவசியமாக தூஷணங்களை அள்ளிக் கொட்டி மனதை நோகப் படுத்துவதும் ஆங்காங்கே நடப்பதுமுண்டு.

**எஸ். ஜெகதீசன்**

### காப்பிலிகள்.

உலகின் தலைநகரமாக லண்டனைத் தெரிந்தோ தெரியாமலோ யாரோ சொல்லிவிட்டார்கள். ஆபிரிக்காவின் கறுப்புக் காப்பிலிகளும் அங்கு சர்வ சாதாரணம். அவர்களின் தலைமயிர் சுருண்டு 'புஸ் புஸ் என்று இருக்கும். ஒரு தரம் பிடித்துப் பார்த்தால் என்ன என்ற பிரமையை ஏற்படுத்தும். நேசமனப்பான்மையில் தலைசிறந்தவர்கள். தமது காரியத்தைச் சாதிப்பதில் வல்லவர்கள்.

### சீனர்.

பரவலாக லண்டன் முழுவதுமே சீனரின் "உருளைக்கிழங்கும் பொரியல் மீனும்" கடைகளும் இத்தாலியரின் 'பிட்ஸா' கடைகளும் காணப்படும். வெள்ளையரின் பிரதான சாப்பாட்டைக் கவனிக்கும் பொறுப்பு அவர்களுடையது. அனேக வெள்ளையர் 'பப்' பில் மது அருந்தியபின் வீடு திரும்பும் பொழுது இவர்களிடம் 'சுடச்சுட'. ஒரு பார்சலையும் எடுத்துச் செல்வர். பொன் நிறத்தில் பொரிந்த உருளைக் கிழங்குத் துண்டங்களும் மீனும், உப்புத் தூளுடனும், வினகிரியுடனும் சேரும் பொழுது ............நாவில் நீரை வரவழைக்கும்.

வீதியால் போகும் ஒரு வெள்ளையரை மறித்து ஒரு ஆசியாக் காரனின் வீட்டுக்கு வழி கேட்டால் இயன்ற மட்டும் அதைக் காட்ட உதவுவான். அப்பொழுதும் எமக்குப் புரியாது விடின் அந்த வீதியால் போனுல் எந்த

வீட்டிலிருந்து "கறிப்பவுடரின்" வாசனை மூக்கைத் துளைக்கின்றதோ அந்த வீடுதான் நாம் தேடும் வீடு என இலேசாகக் கூறிவிடுவான்.

### ஆசியர்.

எமது அயல் நாட்டவர் என்றதினால் பாகிஸ்தானியரையும், இந்தியரையும் அவதானிக்கின்றான் எமது புதியவன். அவர்களிற் பலர் லண்டனுக்கு வந்து பலகாலமாகி விட்டபொழுதும், ஆங்கிலம் சரளமாகக் கதைக்கமாட்டார்கள். கூடுதலாக இந்தியையோ உருதுவையோதான் தமது சம்பாஷணைக்குப் பயன் படுத்துவார்கள். அதனால் ஆங்கிலேயருக்கு அவர்கள் மீது ஒரு இனம் புரியாத துவேஷம் வளரவே வழி செய்கின்றது. எந்த மொழியையும் இலகுவாகப் பிடித்து விடும் இலங்கை மாணவருக்கு காலக் கிரமத்தில், அவர்களின் பழக்க தோஷத்தால் இந்தி உருது தெரிய வந்தாலும் ஆச்சரியமில்லை.

### இலங்கையர்.

வெளியுலகத்தை நோட்டம் விட்ட நம்மவன் திரும்பி நமது சனங்களை அவதானிக்கின்றான். சாதாரணமாக எங்கெல்லாம் கல்லூரிகளும், கலாசாலைகளும் உண்டோ அங்கெல்லாம் நம்மவர்கள் புத்தகக் கட்டுடன் வீதி வலம் வருவதைக் காணலாம். அரைகுறை ஆங்கிலமும், முழுக்க முழுக்க ஆங்கில சம்பாஷணையும் நம்மவர்களின் 'சேவிசை' எடுத்துக்கூறுகின்றன. சிலர் படிப்பைத் துறந்து இரவு பகல் ஓய்வின்றி வேலை செய்வதும் உண்டு. அவர்கள் தமது எதிர் காலத்தை ஏமாற்றுகின்றார்கள் என்பது அவர்களுக்குத் தெரியாதோ.? என எமது புதியவனின் இதயம் வேதனை அடையும். பலர் வார இறுதியிலும் விடுமுறை நாட்களிலும் முழுநேர வேலை – அதாவது எட்டு மணிநேர வேலை செய்வார்கள்.

### தவணை முறை.

அழகிய வீடோ... புத்தம் புதுக் காரோ... சிறிய ரேடியோவோ... அல்லது மணிக்கூடோ, உடுபிடவைகளோ எதுவுமே தவணைமுறையில் வாங்க முடியும். அதனால் எமக்குத் தேவையானவற்றையும் உடனுக்குடன் வாங்கி விடலாம். மாதாமாதம் பணத்தைச் செலுத்தலாம்.

டெலிவிஷனும், வீடியோவும் ரேடியோவும் எமது பொழுதைப் போக்குகின்றன.

### சுப்பர் மார்க்கட்.

தமிழீழப் பகுதிகளில் இல்லாத இலகுவான 'சொப்பிங்



முறை' சுப்பர் மார்க்கட் ஆகும். அனேகமான சுப்பர் மார்க்கட்களில் எமக்குத் தேவையான சகலதுமே வாங்க முடியும். சீனி, அரிசி, கோப்பி, தேயிலை, சிகரட், முட்டை, உடுபிடவை எனப் பட்டியல் விரிவடையும். ஆனால் சிகரட் வாங்குவதெனின் ஒரு பைக்கட். முட்டையெனின் ஆறு அடங்கிய ஒரு பெட்டி. தனியாக ஒரு சிகரட்டோ அல்லது ஒரு முட்டையோ அல்லது ஒரு ரொபியோ லண்டனில் எங்குமே வாங்க முடியாது. சுப்பர் மார்க்கட்களில் எமக்குத் தேவையானவற்றை நாமே சுற்றித் திரிந்து எடுத்துக் கொள்ள வேண்டும். பின்னர் கடை வாசலில் இருக்கும் காசாளரிடம் உரிய பணத்தைக் கொடுத்துவிட்டால் சரி. எல்லாப் பொருட்களிலும் விலையும் குறிக்கப்பட்டிருப்பதால் எமது விருப்பத்தை—எமது தேவைக்கு ஏற்ப விலைகளுடன் ஒப்பிட்டுப் பார்த்து எடுத்துக் கொள்ள முடியும்.

சிலர் களவாடி, சிவில் உடையில் நிற்கும் பாதுகாப்பு அதிகாரிகளிடம் வசமாகச் சிக்குவதும் உண்டு.

பட்ஜெட் முடிந்தவுடன் விலையை உடனடியாக அதிகரிக்காததும் வெள்ளையரிடம் எமது புதியவன் கண்ட ஆச்சரியமான அனுபவம். வியாபாரத் தந்திரமுடைய வெள்ளையரிடம் நாம் படிக்க வேண்டிய நல்ல பாடங்களில் இதுவும் ஒன்று, கையிருப்பு முடியும்வரை, மூன்று நான்கு மாத கால மெனினும் விலையில் அதிகரிப்பு இராது. ஆனால் விலை குறைக்கப் பட்டாலோ மக்களின் நன்மை கருதி அடுத்த நாளே அது அமுல் படுத்தப் படும்

### காசைக் காணாத வெள்ளையர்

வெள்ளையரில் பலர் காசைக் கண்ணால் காண்பது குறைவு என்றால் ஆச்சரியமில்லையா? சுப்பர் மாக்கட்டிலோ அல்லது,பப்பிலோ அல்லது சீனருடைய உருளைக் கிழங்குக் கடையிலோ அல்லது பெற்றோல் நிலையங்களிலோ சில தஸ்தாவேஜுகளுடன் தமக்குத் தேவையானதைப் பெறுவார்கள். சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக் காசோலையோ மற்றைய தஸ்தாவேஜுகளையோ தமது வங்கிக்கு அனுப்பும்படி தெரிவிப்பார்கள். இவர்களது சம்பளப்பணத்தை காரியாலயங்களிலிருந்து நேரடியாகப் பெறும் வங்கிகளும் இவர்களுக்கான

பணப் பட்டுவாடாவைக் கச்சிதமாகக் கவனிக்கும். எம்மவர்கள் சிலரிடமும் இப்பழக்கம் உண்டு.

**விளையாட்டுப் பிரியர்**

வீதிவலம் வந்த எமது புதியவனின் கண்களில் அடுத்து அகப்பட்டவை விளையாட்டு மைதானங்கள். வெள்ளையர் விளையாட்டுகளுக்கு முக்கியத்துவம் கூடுதலாகவே கொடுக்கின்றார்கள். கிறிக்கெற் என்றால் 'லோட்ஸ்' மைதானம் நிரம்பி வழியும். டெனிஸ் எனின் 'விம்பிள்டன்' சுமையைத் தாங்கமுடியாது திணறும். குதிரைப் பந்தயத்தில் 'எப்சம்' எங்கும் கூட்டம் ஜாம் ஜாம் என்று இருக்கும். வாரந்தோறும் நடக்கும் 52 உதைபந்தாட்டங்களில் எட்டினது முடிவைச் சரியாகச் சொன்னால் அதற்கு கோடிக்கணக்கான ரூபா பரிசு வழங்கப்படும். அதே போல ஒவ்வொரு விளையாட்டிற்கும் 'புக்கிங்' நிறைய உண்டு. காசோடும் அவர்கள் விளையாடுகின்றார்களோ? பல வெள்ளையர் ஒரு வருடத்துக்கு முன்னதாகவே அடுத்த வருடத்துக்குரிய முக்கிய விளையாட்டுக்குத் தமது ஆசனங்களைப் பதிவு செய்து விடுகின்றார்கள் என்றால் அவர்களது மோகத்தைப் பாருங்களேன்.

**பாதையோர மெஷின்கள்**

லண்டன் பாதையோரங்களில் ஆங்காங்கே காணப்படும் அர்த்தமுள்ள பொருட்கள் சிலவும் ஆபத்பாந்தவனாகவே இருப்பதை அவன் உணர்கின்றான்.

களைத்துவிட்டால் இருக்கவே யிருக்கின்றது தேனீரோ அல்லது குளிர்பானமோ! அதற்குரிய மெசினில் உரியகாசைப்போட்டுத் தேவையான பொத்தானை அழுத்தினால் கொடுத்து உதவுமே! புகைப்படம் எடுக்க வேண்டுமா? உடனடியாக புகைப்படத்தின் நாலு பிரதிகளுடன் தரும் மெஷின் பாதையோரத்தில் காணப்படுகிறது.

அடடா...... முத்திரை வாங்க மறந்துவிட்டோமா? கவலையேன் அதற்கும் மெஷின் உண்டு.

குழந்தைகள் தொல்லையா? சொக்கலேட் மெசினும் சுயிங்கம் மெஷினும் இருக்கையில் பயம் ஏன்?

தொலைபேசி நிலையங்களும் ஏராளம் உண்டு.

**சலவை**

இவர்களது சலவை முறையும் மெஷின்தான். "என்னப்பா உடுப்புத் தந்து மூன்று மாத மாச்சு" என்று வாடிக்கையாளர் அங்கலாய்ப்பதும்—

'தம்பி இஞ்சைபாரும் இரண்டு மூன்று நாட்களாய் மழை வந்து குழப்பிப் போட்டுது'' எனச் சலவைத் தொழிலாளி சமாளிப்பதும் லண்டனில் இல்லை.

பரவலாகக் காணப்படும் சலவை மெஷின் நிலையங்களுற்கு எமது உடுப்பை நாமே எடுத்துச் செல்லவேண்டும். அங்கு காணப்படும் மெஷின்களில் காசைப் போட்டு இயக்கிவிட்டால் சுமார் 40 கிலோ உடுப்பு அரை மணி நேரத்தில் வெண்மையாகிவிடும். பின்பு காயவைப்பதற்கும் மெஷின்தான். எல்லாமாக 40 நிமிட நேரத்தில் வேலை முடிந்து விடும்.

—லண்டன் வாழ்வு ஒரு சுவையான அனுபவம்!

# புராதன கண்டம்

உலகில் எப்போதோ ஒரு நாள் எல்லாக் கண்டங்களும் ஒரு கண்டமாகத்தான் இருந்தது.

(Gondwana) 'கொன்ட்வானா' — என்று அந்த ஒரு கண்டம் அழைக்கப்பட்டு வந்தது.

20 கோடி ஆண்டுகளுக்கு முன்னர்தான் அந்தக்கண்டம், பல கண்டங்களாகப் பிரியத் தொடங்கின.

ஆனால் 'கொன்ட்வானா' கண்டம் இருந்தது பற்றி விஞ்ஞான ஆராய்ச்சியாளர்கள் ஆராய்ந்து வந்தனர். 'ஒரு கண்டத் தத்துவத்தை நிலைநாட்டும் தடயங்கள் இன்றி இதுவரை காலமும் அவர்களின் முயற்சி இழுபட்டு வந்தது.

இப்போது அந்த ஒரு கண்டத் தத்துவத்தை நிரூபிக்கும் தடயம் ஒன்றை நோர்வே நாட்டு ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

அண்டார்டிக்கா கடலின் அடியில் 2,500 மீட்டர் உயரமான மலைத்தொடர் ஒன்றை நோர்வே ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

கடலின் அடியில் மலைத்தொடர் சம்பந்தமான ஆராய்ச்சிகளில் நோர்வே விஞ்ஞானிகள் ஈடுபட உள்ளனர்.

உலகம் ஒரு கண்டமாக இருந்தபோது தற்சமயம் உள்ள எல்லாக் கண்டங்களையும் இணைத்து இருந்த மலைத்தொடர் இதுதானா என்பதைக் கண்டுபிடிப்பதே இந்த ஆராய்ச்சியின் நோக்கம்.

—தீபன்

முயன்று பாருங்களேன்

# கணிதப் புதிர்

திருடன் ஒருவன் மாந்தோப்பு ஒன்றினுள் திருடப் புகுந்தான். காவலாளியிடம் மாட்டிக் கொண்டான். காவலாளி திருடனைப் புதுமுறையிற் தண்டிக்க விரும்பினுன்.

சில மாங்காய்களைத் திருடனிடம் கொடுத்துப் பின்னர் இவ்வாறு கூறினுன்:

''அருகில் மூன்று மாந்தோப்புகள் உள்ளன. அங்கும் காவலாளிகள் உள்ளனர். நீ முதற் தோப்புக் காவலாளிக்கு லஞ்சமாக 8 மாங்காய்களைக் கொடுத்து உள்ளே செல். உன்னிடம் மீதமாக எத்தனை மாங்காய்கள் உண்டோ அத்தனை மாங்காய்களைத் தோப்பில் இருந்து பறித்துக் கொள். தோப்பை விட்டு வெளியே வரும் போதும் காவலாளிக்கு 8 மாங்காய்களைக் கொடு. இப்படியே மற்றைய இரு தோப்புக்களிலும் நடந்து கொள். பின்னர் மீதியாயிருக்கும் மாங்காய்களுடன் நீ செல்லலாம்.''

திருடன் மாங்காய்களைப் பெற்றுக் கொண்டு காவலாளி கூறியபடியே செய்தான். ஆனுல் மூன்றுவது தோப்பில் உள்ள காவலாளிக்கு 8 மாங்காய்களைக்கொடுத்துவிட்டு வெளியேறும்போது வெறுங்கையோடு வெளியேறி ஏமாற்றமடைந்தான்.

முதலில் காவலாளி கொடுத்த மாங்காய்கள் எத்தனை.?

ஆக்கம்:- ஹெலன் பேண்ஸ்

விடை: (அடுத்த இதழில்... !)

## அமெரிக்காவிலும் வீதி வாழ்க்கை

சுமார் 35,000 பேர் வீதிகளில் வாழ்கின்றனர். அமெரிக்காவின் உத்தியோகப்பற்றற்ற தலைநகரமாக விளங்குவது லொஸ் ஏஞ்சலஸ்.

அமெரிக்காவிலே இரண்டாவது பெரிய நகரம் இது. வீடில்லாப் பிரச்சனை இந்த நகரத்தைப் பாதித்துள்ளது. 35,000 மக்கள் வரையில் வீதி ஓரங்களில் வாழ்கின்றனர். நகரின் முனிசிப்பல் சபை விசேட கூட்டம் ஒன்றை நடத்தி இது சம்பந்தமாக ஆராய்ந்தது.

— தீபன்

## அர்ச்சுனு
## சிறுவர் வட்டம்

பாடசாலைகளில் ஆண்டு 6 ஆம் வகுப்பு வரை கல்விபயிலும் மாணவர்கள் ''அர்ச்சுனு'' சிறுவர் வட்டத்தில் உறுப்பினர்களாகச் சேரலாம்.

உறுப்பினர்களாகச் சேர்ந்த மாணவர்கள் எழுதும் கதை, கவிதை, கட்டுரைகள் மட்டுமே அருச்சுனு'வின் சிறுவர் வட்டப் பகுதியில் இடம்பெறும். உறுப்பினர்களாகச் சேரவிரும்புவோர் பின்வரும் கூப்பனை வெட்டி அஞ்சல் அட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கவும்.

அனுப்ப வேண்டிய முகவரி:-
பொறுப்பாளர்.
''அர்ச்சுனு'' சிறுவர் வட்டம்,
அஞ்சல் பெட்டி எண்: 23,
யாழ்ப்பாணம்.

'' அர்ச்சுனு ''
சிறுவர் வட்டம்
கூப்பன்

முழுப்பெயர்:- செல்வன் / செல்வி ........................................

........................................

வகுப்பு: ........................................

பாடசாலையின் பெயர்: ..........................

........................................

முகவரி: ........................................

........................................

மாணவர் கையொப்பம்: ........................

........................................

அதிபர் கையெப்பம்: ........................

........................................

# பாப்பா பார்க்கும் அப்பா

## ஒரு மகவின் கண்ணேட்டம்

பெற்ருேர் தமது குழந்தைகள் நல்லவர்களாக அறிவாளிகளாக, நல்ல பழக்கங்கள் உள்ளவர்களாக இருக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பது உலக நடைமுறை.

ஆனல் தம் பெற்ருேர் அறிவுள்ளோராய், நற்குணமுடையோராய், யாவராலும் மதிக்கப் படுவோராய், தம்மை உயிராக நேசிப்போராய் இருக்கவேண்டும் என்று பிள்ளைகள் எதிர்பார்க்கிருர்கள்.

சில பெற்ருேர் தாம் வாழ்வில் அடைய விரும்பியும் அடைய முடியாமற் போனவற்றைத் தமது மக்கள் விரும்பினுலும் விரும்பாவிட்டாலும்கூட பலாத்காரமாக தமது மக்கள் மூலம் அடைந்து ஆன்மதிருப்தி பெற முயல்கிருர்கள். இதில் பலர் ஏமாற்றமடைந்து விரக்தியடைவதும் உண்டு.

தாமே குடித்து வெறித்துக் கூத்தாடி குடும்பக் கெளரவத்தை வீதி வீதியாக ஏலம் போட்டு ஒழுங்கை வேலிகளுக்கெல்லாம் முட்டுக் கொடுத்து வரும் பல தந்தையர் தமது மக்களின் நற்குண பழக்கவழக்கங்களைப் பேணுவதற்காக கண்டிப்பதும் தண்டிப்பதும் நாம் அன்ருடம் காணும் காட்சிகள். அத் தந்தையர் தமது பிள்ளைகள் தம்மைப்பற்றி மனதில் நினைப்பதைஅறிவதில்லை.

மகன் தந்தைக் காற்றும் உதவி..... என்று தொடங்கும் குறளைப் போதிக்கும் தந்தையர் பலர், தந்தை மகற்காற்றும் உதவியை மறந்துவிடுதல் ஏனே? தேர்ச்சி அட்டையைப் பார்த்து ஏறிக் குதிக்கும் பெற்ருேர் வீட்டுப் பாடம் சொல்லிக் கொடுக்க நேரமின்றியோ, சலிப்புற்ருே அல்லது கோபப்பட்டோ பிள்ளைகளுடன் வாதிடும்போது பிள்ளைகளின் உள்ளம் எவ்வாறு வெதும்புகிறதென்று அறிவதில்லை.

மக்களின் பிஞ்சு உள்ளங்களைத் தமது அடிகளும் உதைகளும் வசைமாரியும் எவ்வாறு புண்படுத்திவிடும் என்று அறிவதில்லை. தமது முற்றிய கைகள் வலிக்கும்வரை அல்லது தமது கோபம் அல்லது இரத்த அழுத்தம் தணியும்வரை தண்டனை வழங்கும் பெற்ருேர் பலர்.

குடிபோதையில் வந்து தாயை அடிக்கும் தகப்பனையும் தகப்பனை அடக்கியாளும் அடங்காப்பிடாரியான தாயையும் குழந்தையுள்ளம் எவ்வாறு எடைபோடுகிறது. அக்குழந்தையின் படிக்கும் பருவம்; மூளை வளர்ச்சி

**சரேஜினி கணேந்திரன்**

யடையும் பருவம்; இப்படியான தொடர்ச்சியாகச் சில குடும்பங்களில் இடம்பெறும் சச்சரவுகளினுல் பெரிதும் பாதிப்படைகின்றது. அந்தப் பிள்ளையின் படிப்பின் நாட்டத்தினைக் குறைத்து மனதில் சஞ்சலத்தையும் அமைதியின்மையையும் ஏற்படுத்துகின்றன. ஆனல் அப்பெற்ருேர் தமது பிள்ளைகளுக்குச் சொல்வதெல்லாம் நாமென்ன டியுசன் வைத்தா படித்தோம் என்பதுதான். ஆனல் உண்மை அதுவல்ல. உங்களுக்கு இப்படியான பெற்ருேர் இருந்தார்களா? என்று சிந்தியுங்கள்.

பேரன் பேத்திகளை அவமதிக்கும், பராமரிக்க மறுக்கும் மருமக்களான தந்தைமாரையும் தாய்மாரையும் பார்த்த குழந்தைகள் தாமும் அக்கைங்கரியத்தை தமக்கு வரப்போகும் மாமன் மாமியரிடத்தும் காண்பிக்க நினைப்பதில் தவறென்ன இருக்க முடியும்.

பிரச்சனைக்குரிய தாய்தந்தையரைப் பெற்ற பிள்ளைகள் தம்மைப்பற்றி சமூகம் என்ன நினைக்கிறது என்பதையும் நினைத்து கவலைப்படுகிறது என்று பல பெற்ருேர் நினைப்பதேயில்லை. "குடிகாரன் பிள்ளை வேறெப்படி இருக்கும்" "தாய் பத்தடி பாய்ந்தால் மகள் பதினறடி பாய்வாள்" என்று பிள்ளைகளின் நிகழ்கால எதிர்கால வாழ்வினையே பாதிக்கும்படியான சமூக அந்தஸ்தினையும்பெற்ருேர் குழந்தைகளுக்குப் பெற்றுக் கொடுத்துவிடுகிருர்கள். அப்படியான நிலையிலுள்ள பிள்ளைகள் இயற்கையாகவே பயந்தசுபாவம் உள்ளோராயும் தமக்குள்ளேயே தாழ்வு மனப்பான்மையையும் வளர்த்துவிடுகிருர்கள்.

ஆகையால் குழந்தைகள் பெற்ருேருக்கு முன் வைக்கும் சமர்ப்பணம் இதோ!

1. எங்களை எமது இயல்புப்படியே ஏற்றுக்கொள்ளுங்கள்.
2. எம்மை வழிநடத்துங்கள்.
3. உங்கள் ஏச்சுப் பேச்சுக்களை விட உங்கள் வாழ்வு எங்களுக்குப் பாடமாக அமையட்டும்.
4. உங்களது புத்திசாலித்தரக் குறைவால் பெறமுடியாது போனதைக் கட்டாயமாகப் பெற்றுத்தர வேண்டிய மகா புத்திசாலியாக உங்கள் பிள்ளை வளரவேண்டுமென இயற்கைக்கு விரோதமாக எதிர்பார்க்காதீர்கள்.
5. எமக்குள் மறைந்திருக்கும் திறமைகளைக் கண்டுபிடித்து, அதனைச் சிறந்த முறையில் வளர்த்தெடுக்க எமக்குதவுங்கள்.

SITHY VINAYAGAR LIBRARY
SANDILIPAI WEST
CHUNNAKAM

6. தமது பெற்றோரைத் தேர்ந்தெடுக்கக்கூடிய சலுகையை ஆண்டவன் எந்தவொரு பிள்ளைக்கும் தரவில்லை என்பதை மட்டும் எச்சந்தர்ப்பத்திலும் மறந்து விடாதீர்கள்.

(சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரிக்கப்பட்டுள்ளது.)

* *

## மொழிப்பற்றிலிருந்து ....

தமிழர் இன்று செய்யத்தகாத செயலில் ஈடுபட்டுத் தம் வலிமையைக் குறைத்துக் கொள்ளலாகாது. "ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே" என்னும் உண்மையை எவர் மறந்தாலும் மறக்கலாம்; சிறுபான்மையோர் மறத்தலாகாது. மொழி வகையில் தமிழர் சிறுபான்மையோர்தான்; தமிழ் ஒரு காலத்தில் இமயம் முதல் குமரி மலை பஃறுளியாறு வரையில் பரவியிருந்த பெருமொழிதான்; ஆனால் இன்று சிறுபான்மையோரின் மொழியாகக் குறுகிவிட்டது. இந்த நிலையில் தமிழ் மொழி வாழவேண்டுமானால் தமிழர் ஒன்றுபட்டு முழங்கவேண்டும். இல்லையேல்.....! ஒற்றுமை குலைந்து மொழியைக் காக்க வகை அறியாமல் கைவிட்டு இந்தத் தலைமுறையில் வாழ்ந்த தமிழரே பழிக்கப்படுவர்.

—டாக்டர் மு. வ.

# முயன்று பாருங்களேன்

## எண்சிலம்பம்

அன்பார்ந்த மாணவ மணிகளே!

கணிதத் துறையில் உங்கள் அறிவை வளர்க்கும் நோக்குடன் அர்ச்சுனுவில் எண்சிலம்பம் தொடர்ந்து வெளிவரும்.

எண்சிலம்பத்தைப் படியுங்கள். சிந்தியுங்கள். தேவையான இடத்தில் கணிதப் பிரச்சனைகளைச் செய்து பாருங்கள்.

விடைகளை எண்சிலம்பம் கூப்பனில் எழுதி, அஞ்சல் அட்டையில் ஒட்டி அனுப்பி வையுங்கள். இப்போட்டியில் நடுவர்களின் முடிவே இறுதியானது.

சரியான விடைகளை எழுதும் அதிஷ்டசாலிக்குப் பரிசுகளும் வழங்கப்படும்.

பரிசு பெற்றவர்கள் கடிதமூலம் அழைக்கப்படுவர். பரிசுக்குரியவரே உரிய அடையாள அத்தாட்சிகளுடன் நேரில்வந்து பரிசைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

| | | |
|---|---|---|
| பரிசு விபரம்: | முதலாம் பரிசு: | ரூபா 50/= |
| | இரண்டாம் பரிசு: | ரூபா 25/= |
| | மூன்றும் பரிசு: | ரூபா 15/= |

அனுப்ப வேண்டிய கடைசித் திகதி: 31 - 10 - 86

அனுப்ப வேண்டிய முகவரி:

எண்சிலம்பம் - 1,
" அர்ச்சுனு "
அஞ்சல்பெட்டி எண் 23,
யாழ்ப்பாணம்,
இலங்கை.

— ஆசிரியர் —

(மறுபக்கம் பார்க்க)

" தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக் கற்றனைத் தூறும் அறிவு"

—வள்ளுவர்.

# எண் சிலம்பம்

ஆக்கம்:
உதங்கா

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ 1 | ஆ 8 | 0 | ■ | இ 2 | ஈ 7 |
| உ 5 | | ■ | ஊ 1 | ■ | 5 |
| ■ | ■ | எ 1 | 8 | ஏ 9 | ■ |
| ஐ 7 | 2 | 0 | ■ | ஒ 1 | 5 |
| | ■ | ஓ 2 | 1 | 2 | ■ |
| ஔ 1 | 4 | 4 | ■ | ஃ 6 | 3 |

## போட்டி இலக்கம் - 1

பெயர் செல்வன்/செல்வி ........................

........................

முகவரி; ........................

........................

கையொப்பம்........................

### இடமிருந்து வலம்

(அ) ஒரு முக்கோணியின் மூன்று கோணங்களின் கூட்டுத் தொகை.

(இ) மூன்றாவது கன எண்.

(உ) எண் அடி 12 இல் இந்த எண்ணின் பெறுமதி எண் அடி பத்தில் 63 ஆகும்.

(ஊ) 899 இன் பூச்சியம் ஆம் அடுக்கு (899·)

(எ) 188.96 இன் கிட்டிய முழு எண்.

(ஐ) அறுகோணி ஒன்றின் அகக்கோணங்களின் கூட்டுத் தொகை.

(ஒ) 16 இன் வர்க்கத்தில் 6 மறைந்து நிற்கின்றது.

(ஓ) 11 இன் வர்க்கம் குழம்பிக் கிடக்கின்றது.

(ஔ) முதல் 12 ஒற்றை எண்களின் கூட்டுத் தொகை.

(ஃ) 2 இன் 6 ஆம் அடுக்கிலும் ஒன்று குறைந்துள்ளது.

### மேலிருந்து கீழ்

(அ) 24 பக்கமுள்ள ஒழுங்கான பல்கோணி ஒன்றின் ஒரு புறக் கோணம்.

(ஆ) எண் அடி 9 இல் இதன் பெறுமதி எண் அடி பத்தில் 75 ஆகும்.

(ஈ) 60 m நீளமும் 45 m அகலமுமுள்ள செவ்வகத்தின் மூலைவிட்டத்தின் நீளம்.

(ஊ) முதல் ...... ஒற்றையெண்களைக் கூட்ட 324 ஆகும்.

(எ) அடி இரண்டில் இதன் மடக்கை 10 ஆகும்.

(ஏ) முதல் 96 ஒற்றை எண்களின் கூட்டுத் தொகை இதுவாகும்.

(ஐ) இரண்டாவது கன எண்ணைக் கூட்டி வர்க்க மூலம் கண்டால் 3 ஆவது கன எண் வரும்.

(ஒ) அடி ஆறில் இதன் மடக்கை 3 ஆகும்.

(ஓ) 15 பக்கமுள்ள ஓர் ஒழுங்கான பல்கோணியின் ஒரு புறக் கோணம்.

விடைகள்: அடுத்த 'அர்ச்சுனா' வில் வெளிவரும்.

---

சிந்திக்கத் தெரிந்தவன் மனிதன்! தானும்சிந்தித்து
மற்றவர்களையும் சிந்திக்க வைப்பவன் அறிஞன்!!

# உலக அரங்கில்

அபிராமி வரதன்



முகாபே



ராஜீவ்

உலக அரங்கிலே இன்று அணிசாரா இயக்கம் ஒரு பலம் வாய்ந்த சக்தியாக மலர்ந்துள்ளது.

அணிசாரா இயக்கத்தின் எட்டாவது உச்சி மாநாடு செப்டம்பர் மாதம் முதலாம் திகதி சிம்பாப்வே நாட்டின் தலைநகரான ஹராரேயில்

## அணிசாரா இயக்கம்

இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியின் தலைமையில் துவங்கியது.

சிம்பாப்வே நாட்டின் பிரதம மந்திரி றொபேர்ட் முகாபே இவ்வியக்கத்தின் புதிய தலைவராகத் தெரிவு செய்யப்பட்டு உள்ளார்.

இன ஒதுக்கல் கொள்கையைக் கடைப்பிடிக்கும் தென்னாபிரிக்க நாட்டின் எல்லையில் உள்ள சிம்பாப்வேயில் இம்மாநாடு நடைபெற்றதால் இம்மாநாட்டில் தென்னாபிரிக்காவின் இன ஒதுக்கல் கொள்கை வெகுவாகக் கண்டிக்கப்பட்டது. அத்துடன் தென்னாபிரிக்கப் படைகள் அங்கோலாவில் இருந்து வெளியேற வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது.

இது தொடர்பாகத் தென்னாபிரிக்க நாட்டுக்கு எதிராகப் பொருளாதாரம் உட்படப் பல கடும் நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

தென்னாபிரிக்கா தனது எல்லைப்புற நாடுகளைத் தாக்குவதை எதிர்ப்பதற்கு நிதியம் ஒன்றினை இவ்வியக்கம் ஆரம்பித்து உள்ளது.

உலக சமாதானத்துக்குப் பாடுபடும்படி எல்லா நாடுகளுக்கும் இம்மாநாடு வேண்டுகோள் விடுத்துள்ளது.


அணிசாரா இயக்கம் 1961 ஆம் ஆண்டில் இருபத்தைந்து அங்கத்துவ நாடுகளுடன் ஆரம்பமானது. இன்று 102 நாடுகள் அங்கத்துவம் பெற்றுள்ள அணிசாரா இயக்கம் இருபத்தைந்து ஆண்டுகளைப் பூர்த்தி செய்துள்ளது. இது உலக வரலாற்றில் ஒரு மைல் கல்லாகும்.

---

''அர்ச்சுனா'' முதல் இதழ் உங்கள் கரங்களில் தவழும் இவ்வேளையில் ...............! உங்களுடன் நேரிலே சந்திக்கும் ஒரு வாய்ப்புக் கிட்டியதாக நாம் உணருகின்றோம். ''அர்ச்சுனா'' பற்றிய உங்கள் ஆக்கபூர்வமான கருத்துக்களைத் தவறாது எழுதியனுப்புங்கள். ''உங்கள் நோக்கு'' என்ற பகுதியில் அவை இடம்பெறும்.

**அனுப்ப வேண்டிய முகவரி:** ''உங்கள் நோக்கு''
அர்ச்சுனா,
அஞ்சல் பெட்டி எண்: 23,
யாழ்ப்பாணம்.

# விளையாட்டுத் துறை



அ. ஸ்ரீஸ்கந்தராஜா

யாழ் மண்ணில் பிறந்த அழகராசா ஸ்ரீஸ்கந்தராசா (அன்ரன் கிறிஸ்ரி) யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரி மாணவனுக இருக்கும்போது தனது 14 வது வயதில் 1979ம் ஆண்டு முதல் உலக சாதனையை நிகழ்த்தினுர்.

ஒற்றைக் காலில் நீண்ட நேரம் நிற்கும் சாதனையே அதுவாகும். முப்பத்தொரு மணித்தியாலம் 48 நிமிடம் 5 விஞடிகள் வரை ஒற்றைக் காலில் நின்று இச் சாதனையை நிகழ்த்தி ''கின்னஸ்'' புத்தகத்தில் இடம் பிடித்துள்ளார்.

1981 ஆம் ஆண்டும் மற்றுமொரு சாதனையையும் நிலைநாட்டினுர். இரண்டு நிமிடங்களில் இருநூற்றி ஐம்பத்திமூன்று (253) தடவைகள் இருந்து எழும்பி அதிசயிக்கக்கூடிய வகையில் சாதனையை ஏற்படுத்தியுள்ளார்.

பிறந்த மண்ணை விட்டுத் தொழிலின் நிமித்தம் பிரான்ஸ்சுக்கு சென்ற இவர் அங்கும் தனது ஆற்றலை வெளிக் காட்டத் தவறவில்லை. பாரீஸ் நகரில் காலை உயர உதைத்து (6 மணித்தியாலம் 5 நிமிடம் 55 விஞடிகளில் 10,376 தடவைகள்) நிலை நாட்டிய சாதனை இவரை உலக சம்பியனுக ஆக்கிவிட்டது.

முழங்காலில் நீண்ட தூரம் நடந்து தனது நாலாவது (42.32 கிலோ மீட்டர்) உலக சாதனையையும் பிரான்ஸிலேயே நிலை நாட்டியுள்ளார்.

சுறுசுறுப்பு மிக்க இளைஞராகிய இவர் இன்னும் பல உலக சாதனைகளைப் புரிந்து எமக்கெல்லாம் பெருமை தேடித் தருவாரென நம்புவோம்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

**வீராங்கனை பி. ரி. உஷா**

தென் கொரியாவின் தலைநகரான சோல் நகரில் நடைபெற்ற ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் இந்தியாவைச் சேர்ந்த பி. ரி. உஷா நான்கு தங்கப் பதக்கங்களைப் பெற்று தான் பிறந்த நாட்டுக்குப் பெருமை தேடிக் கொடுத்துள்ளார். 400 மீற்றர் தடை தாண்டும் ஓட்டத்தில் முதல் தங்கப் பதக்கத்தைப் பெற்ற இவர்இத்தூரத்தை 56.08 விஞடிகளில் ஓடி முடித்து புதிய ஆசியசாதனை ஒன்றையும் இப் போட்டியில் நிலைநாட்டியுள்ளார்.

200 மீற்றர் ஓட்டப் போட்டியிலும் முதலாவதாக வந்து இரண்டாவது தங்கப் பதக்கத்தையும் பெற்றுள்ளார். 200 மீற்றர் ஓட்டப் போட்டியிலும் புதிய சாதனை இவரால் நிலைநாட்டப்பட்டுள்ளது.

400 மீற்றர் ஓட்டப் பந்தயத்திலும்முதலாவதாக வந்து தங்கப் பதக்கத்தைப் பெற்றுக் கொண்டார்.

**சுனில் கவஸ்கார்**

கிரிக்கெற் விளையாட்டில் சாதனைகள் பலவற்றை நிலை நாட்டி கிரிக்கெற் உலகின் முடிசூடா மன்னனுகத் திகழும் இந்திய கிரிக்கெற் வீரர் சுனில்கவஸ்கார் தொடர்ந்து 100 ரெஸ்ற்கள் விளையாடிய பெருமையையும் பெற்றுள்ளார்.

தமிழ் நாட்டில் சென்னை சிதம்பரம் மைதானத்தில் அவுஸ்திரேலியாவுடன் சென்ற மாதம் விளையாடிய முதலாவது ரெஸ்ற் விளையாட்டிலேயே இச்சாதனையும் நிலைநாட்டப்பட்டது.



சுனில் கவஸ்கார்

தொகுப்பு -- நித்திலம்

---

அகிம்சை கோழையின் கருவியாக இருக்கக்கூடாது.
அது வீரனின் கருவியாக விளங்க வேண்டும் -காந்தியடிகள்.

பாதுகாப்பான சூழலில்

நவநாகரிக

தையல் வேலைகளுக்கு

நாடவேண்டிய

சிறந்த ஸ்தாபனம்

சஹீட் ரெயிலறிங்

"தம்பு பில்டிங்"
கே. கே. எஸ் வீதி,
இணுவில்.

தத்ரூபமான

புகைப் படங்களுக்கு

நினைவில் நிறுத்திக்கொள்ளுங்கள்

கவி போட்டோ

"தம்பு பில்டிங்"
கே. கே. எஸ் வீதி,
இணுவில்.

உங்கள் தேவை அறிந்து
சிறப்பான சேவை ஆற்ற
என்றும் தயாராக உள்ளோம்

AMEER TEX
FAMOUS TAILORS IN NORTH
73, GRAND BAZAAR, JAFFNA.
வட இலங்கையில் பிரசித்திபெற்ற
✱ தையல் நிலையம் ✱
★ அமீர் ரெக்ஸ் ★
73, பெரியகடை, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23021

"அர்ச்சுனு"வை
வாழ்த்துகின்றேம்
V
(B) பிறயிற்
ரீயூசன் சென்ரர்
சம்பியன் ஒழுங்கை,
கொக்குவில்.

மைக்ரோ கொம்யூனிக்கேசன்
வனப்பும் பாதுகாப்பும் நிறைந்த கொக்குவில் நகரத்தின் மத்தியில் புதிதாக நிறுவப்பட்ட எமது நிறுவனத்திலிருந்து வெளிநாடுகளுக்கான உங்கள் தொலைபேசித் தொடர்புகளை 24 மணிநேரமும் பெற்றுக் கொள்ள இன்றே நாடுங்கள்.
மைக்ரோ
கொம்யூனிக்கேசன்
குளப்பிட்டி சந்தி, கே. கே. எஸ் வீதி,
கொக்குவில்.

SITHY VINAYAGAR LIBRARY
EARLALAI WEST
CHUNNAKAM



பாலர் வகுப்பு முதல்

பட்டதாரி வகுப்பு வரையிலான

## சகல

## புத்தகங்களுக்கும்

## உபகரணங்களுக்கும்

V

## நாடவேண்டிய இடம்

V

# பூபாலசிங்கம் புத்தகசாலை

யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 23631

# நல்லதையே செய்யுங்கள்

வரண்ட காலத்தில் குளங்களை ஆழமாக்குவோம்.

விஜயதசமி நாட்களில் பயன் தரு மரங்கள் நாட்டுவோம்.

மழை பெய்யும் பொழுது இயன்றளவு நீரைத் தேக்குவோம்.

பனையபிவிருத்தி தொழிலபிவிருத்தியாகும் என்போம்.

சுற்றுடல் சூழலைத் தூய்மையாக வைத்திருப்போம்.

நோயணுகா விதிகளை அறிந்து சுகாதாரம் பேணுவோம்.

உள்நாட்டு மூலப்பொருள்களை உற்பத்திக்கு எடுப்போம்.

உள்ளூர் உற்பத்திகளுக்கு ஆதரவு கொடுப்போம்.

விவசாயத்துறைக்கு விரைவு நடை பழக்குவோம்.

வீண் செலவை விடுத்து வாழ்வுக்கு வழி அமைப்போம்.

சமயப்பணி, தமிழ்ப்பணி சமூகப்பணி செய்வோம்.

ஊர்கள்தோறும் கோயில்களை புனரமைப்போம்.

எமது பண்பாட்டுப் பாரம்பரியத்தைப் பேணுவோம்.

பெரியவர் நினைவு நாள்களைக் கொண்டாடுவோம்.

கிடைத்தற்கருமையான நூல்களை அச்சேற்றுவோம்.

இயன்றளவு கல்விப்பணியை இலவசமாகச் செய்வோம்.

எல்லோரும் யோகாசனம் செய்ய வழி செய்வோம்.

மில்க்வைற் MWS MILKWHITE தலைவர்கள்

## மில்க்வைற்

சவர்க்காரத்

தொழிலகம்

த.பெ. இல. 77, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 23233

✷ வட இலங்கையில் ✷

ஒரே ஒரு விளம்பர முகவர்கள்

# செனித்

## மார்க்கட்டிங் அன்ட் அட்வடைசிங் சிஸ்டம்ஸ்

மே/பா யாழ். பீச் இன், 139, கடற்கரை வீதி, யாழ்நகர்.

நிர்வாக இயக்குநர்

ஜோ. எகட்டன்

உங்கள் வியாபாரப் பொருட்களை கவர்ச்சி விளம்பரங்களுடன்

வாடிக்கையாளருக்குத் தெரியப்படுத்துவதற்கு

நீங்கள் நாடவேண்டிய இடம்

## ஜோ. எகட்டன்

"செனித்" யாழ்நகர்.

விளம்பர வடிவமைப்பு

ஜோ. எகட்டன் அன்ட் மணிக்குரல் மேஜர்ஷன்

# ROCK

Engjneers & Contractors Water Supply & Building Works

# குழாய்க் கிணறுகள்

(இயந்திரங்கள் மூலம்)

யாழ்ப்பாணக் குடா நாட்டுக்குள் உள்ள எந்த இடத்திலும் சரி

## 24 மணித்தியாலங்களுக்குள்

குழாய்க் கிணற்றை அமைத்துத் தண்ணீரும் பெற்றுத் தருவோம்

தோட்டத் தேவையாகவும் இருக்கலாம் வீட்டுத் தேவையாகவும் இருக்கலாம்

எமது ஒரு குழாய்க் கிணற்றிலிருந்து குறைந்தது

5 ஏக்கர் நிலத்தில் பயிர்ச் செய்யலாம்

குழாய்க்கிணறுகள் அமைப்பதற்கு கஷ்டமாக இதுவரை இருந்த இடங்களாகிய சாவகச்சேரி, மீசாலே, கொடிகாமம், கச்சாய், குடமியன், மிருசுவில், பளை போன்ற இடங்களிலும் நாங்கள் வெற்றிகரமாக அமைத்துக் கொடுத்திருக்கிறோம்.

தொடர்பு கொள்ளுங்கள்.

# றெக் எஞ்ஜினியர்ஸ்

பருத்தித்துறை வீதி, கோப்பாய்.

நிதித் துறையில் நாணயம் மிக்க நண்பன்

# ✷ "ஷப்ரு" ✷

★ நம்பிக்கை !

★ நாணயம் ! !

★ உத்தரவாதம் ! ! !

## ஷப்ரு வழங்கும் வட்டித் திட்டங்கள்

- வைப்புச் சான்றிதழ் திட்டம்
- நிலையான முதலீட்டுத் திட்டம்
- முதலீட்டுச் சேமிப்புத் திட்டம்

உங்கள் பணத்தின் பெறுமதியைக் கூட்டிட, மாதாந்தம் நிலையான வருவாய் முதலீட்டு வளர்ச்சி பெற, உழைக்கும் போதே மாதாந்தம் சேமிக்க

நீங்கள் நம்பிக்கையுடன்

நாடவேண்டிய இடம்

## ஷப்ரு யுனிக்கோ பினான்ஸ் லிமிட்டெட்

பதிவு அலுவலகம்:
61, நியூ புல்லர்ஸ் வீதி,
கொழும்பு - 4.

தொலைபேசி: 589310, 500576

207, மின்சார நிலையவீதி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 22073:, 24805

இச்சஞ்சிகை யாழ்ப்பாணம், மின்சார நிலையவீதி, இரண்டாம் ஒழுங்கை, 15ஆம் இலக்கத்திலுள்ள உதயன் பப்பிளிக்கேஷன்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட் நிறுவனத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு ஒக்டோபர் மாதம் வெளியிடப்பட்டது.

1986

SITHY VINAYAGAR LIBRARY
EARLALAI WEST
CHUNNAKAM

Lanka
cement

NEW GENERATIONS USE

# LANKA CEMENT

**FOR STHENGTH & DURABILITY**

**WE SAY IT**

OUR CUSTOMERS CONFIRM IT

புதிய தலைமுறை நீண்டநாள் பாவனைக்கும்

உறுதிக்கும் இன்று பாவிப்பது

# லங்கா சீமெண்ட்

நாம் சொல்லுகிறோம்

**பாவனையாளர்கள் உறுதிப்படுத்துகிறார்கள்**

●

*Head Office:*
**M/s- LANKA CEMENT LTD.,**
**7th Floor**
**130, W. A. D. Ramanayake Mawatha**
**Colombo—2**
*Phone:* 547541, 547746 & 541358

*Factory:*
**M/s. LANKA CEMENT LTD.**
**Keerimalai Road**
**Kankesanthurai**
*Phone:* 22605, 22810

1986 ஒக்டோபர்

# ஜீவாகாரம்

## (முழுக்குடும்ப உப உணவு)



யாழ்ப்பாணம் போதனு வைத்தியசாலையின் ஆரம்ப சுகாதார பராமரிப்பு ஆராய்ச்சிப் பிரிவின் அதி உன்னத கண்டுபிடிப்பு

**ஜீவாகாரம்**

★ குழந்தைகள் ★ பாலூட்டுந் தாய்மார்கள்
★ கர்ப்பந் தரித்தவர்கள் ★ முதியவர்கள்
★ போசாக்குக் குறைந்தவர்கள் ஏனையோருக்கும்

**தரமான சத்துள்ள சிறந்த உணவு**

விரும்பிய அளவு பைக்கற்றுக்களில்

# எங்கும் கிடைக்கும்.

---

விநியோகஸ்தர்கள்: அண்ணா தொழிலகம் - இணுவில்.

---